Registneed as a News paper in Sri Lanka    பக்கங்கள்: ஆறு    விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01    பிரமோதூத ஸ்ரீ சித்திரை மீ 14ஆம் உ    வெள்ளிக்கிழமை    (27 - 04 - 1990)    ஹிஜ்ரி 1410    ஷவ்வா 1    ஓசை 68

## அமைச்சர் தேவராஜ் ஆலய வழிபாட்டைப் பின்போட்டார்

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலங்களில் இலங்கை விமானப் படையின் தாக்குதல்களுக்குள்ளாகிய வண்ணார்பண்ணை சிவன் கோவில், சுதுமலை அம்மன் கோவில் போன்ற ஆலயங்கள் உட்பட யாழ். மாவட்டத்தில் உள்ள பல ஆலயங்களையும், வழிபாடு செய்து அருள் பெறுவதற்கு என விஜயம் செய்யவிருந்த இந்துசமய விவகார இராஜாங்க அமைச்சர் வி. பி. தேவராஜ் அவர்கள் தனது ஆலய வழிபாட்டை பின் போட்டுள்ளார்.

இவர் தனது விஜயத்தின் போது யாழ். மாவட்டத்து கோவில்கள் எவ்வளவு தூரம் சேதப்படுத்தப்பட்டுள்ளது என்பது பற்றி மதிப்பீடு செய்வதாகவும் திட்டமிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (லோ)

பாதுகாப்பு குடியேற்றம் முஸ்லிம் தமிழ் ஒற்றுமை

# ஆறாம் திருத்தம் நீக்கக் காரணம்

(கொழும்பு)

தமிழ்ப் பேசும் மக்களின் பாதுகாப்பு, குடியேற்றங்கள், தமிழ் முஸ்லிம் மக்களின் ,உறவுகள் பற்றிய இம்மூன்று பிரச்சினைகளையும் தீர்க்க விரும்பும் அரசானது முதலில் ஆறாவது திருத்தச் சட்டத்தினை நீக்குவதன் மூலம் நம்பிக்கை சமிக்ஞையைக் காட்ட முடியும் என அவசரகாலச் சட்ட விதிகளை மேலும் ஒரு மாதம் நீடிக்கக் கோரும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் ஈழவர் ஜனநாயக முன்னணி எம் பி சேகு தாவூத் பசீர் கூறினார்

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், ஆறாவது திருத்தச்சட்டம் நீக்குவது தொடர்பாக பெரும்பான்மை வாக்குகள் பெறுதல் என்பதில் சில சமயங்களில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படலாம். ஆனால் சகல எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியும் இவ்விடயத்தில் ஒன்றிணைந்து தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுகின்ற பணியில் ஒத்துழைத்து இந்நாட்டில் அனைத்து மக்களுக்கும் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவதில் தடைக் காரணியாக உள்ள

(6ம் பக்கம் பார்க்க)

## ஆயர் சுகவீனம்

(விசேட நிருபர்)

யாழ். ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை சுகவீனம் அடைந்திருப்பதாக ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக சந்திப்புகள் நிறுத்தப்பட்டிருப்பதாகவும், மிகுந்த ஓய்வுபெறுமாறு வைத்திய ஆலோசனைகள் தெரிவித்திருப்பதாகவும் மேலும் அறியப்படுகிறது.(21)

## அரச அதிபர் இராணுவ அதிகாரி சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

பலாலி விமானநிலைய ஓடுபாதை விஸ்தரிப்புக்கென வீகரிக்கப்பட்ட காணிகள் பற்றிய நிலைமையை அறிந்து கொள்வதற்கு நேற்று முன்தினம் யாழ். செயலகத்திற்கு இலங்கை இராணுவ அதிகாரிகள் விஜயம் செய்திருந்தனர் என யாழ். அரசாங்க அதிபர் தெரிவிக்கிறார்.

மேலும் அவர் இவ் விடயம் பற்றி கூறுகையில் இலங்கை இராணுவ அதிகாரிகள் தம்முடன் வித்தியாசமான எதுவித பேச்சுக்களிலும் ஈடுபடவில்லைஎன உறுதிபட கூறினார். (லோ)

# தமிழ் பொலிசார் உதாசீனம்

(நமது சிறப்பு நிருபர்)

வவுனியாவில் தமிழ்ப் பொலிஸார் புறக்கணிக்கப்படுவதாகவும், மோசமாக நடத்தப்படுவதாகவும் புகார் கூறப்படுகிறது வடக்கு மாகாணத்தின் எல்லை நகரமான வவுனியாவின் பொலிஸ் நிலையத்தில் முந்நூற்றைம்பது சிங்களப் பொலிஸாரும், ஐம்பத்தைந்து தமிழ்ப் பொலிஸாருமே கடமையாற்றுகின்றனர்

இப் பொலிஸ் நிலையத்தில் உயர் அதிகாரிகளாகத் தமிழர்களே கடமையாற்றுகின்றபோதிலும் சிங்களப் பொலிசாரே கட்டுப்பாடுகள் விதித்து நடத்துவதாகவும் தெரியவருகிறது.

சிங்களப் பொலிசாருக்கு நவீன ஆயுதங்கள் வழங்கப்பட்டுள்ள அதே சமயம் தமிழ்ப் பொலிசாருக்குப் பழங்காலத் துப்பாக்கிகள் வழங்கப்பட்டிருக்கிறதாம்.

இதேசமயம் வவுனியா நகர சபைக் கட்டிடத்தில் முகாமிட்டிருந்த சிங்களப் பொலிசார் இன்னமும் அங்கிருந்து முற்றாக வெளியேறாத நிலையில் வவுனியா விமானநிலைய விஸ்தரிப்புக் கட்டிடத்திலும் பொலிசார் சென்று தங்கியிருப்பதாகவும் தெரியவருகிறது.

வவுனியாவிலுள்ள வங்கிகளுக்கு கடமையாற்றப் பொலிசார் அனுப்பப்படும் பொழுது சிங்களப் பொலிசாருக்கே முதலிடம் அளிக்கப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## "ஆயுதம், வன்செயலில் எனக்கு நம்பிக்கையில்லை"

---பிரேமதாசா

(கொழும்பு)

கல்விமான்களின் ஆலோசனைகளுக்கிணங்க நாம் சமாதானமாகவும், ஐக்கியத்துடனும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு வருகின்றோம் என்பதை உலக நாடுகளுக்கு விளக்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர் பிரேமதாசா நேற்று கொழும்பில் நடைபெற்ற மதவைபவம் ஒன்றில் கூறினார்

ஆயுதத்தில் எனக்கு நம்பிக்கையில் லை. அதேபோல வன்செயல், மோதல் என்பனவற்றிலும் நம்பிக்கையில்லை.

தவறு செய்தவர்களை புத்த பெருமானின் கொள்கைப்படி நல்லவர்களாக மாற்றமுடியும் என்றும் அவர் கூறினார்

## புகையிரதத்தில் அனாதரவாக வானொலிப் பெட்டி

யாழ்ப்பாணம்

யாழ்-கொழும்பு ரயிலிலிருந்து அனாதரவான வானெலிப் பெட்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது வெள்ளவத்தையை சேர்ந்த கணசரவணபவான் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட இந்த வானெலிப்பெட்டி யாழ் பிரதம புகையிரத நிலையத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இவ் வானெலிப்பெட்டியின் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களுடன் பிரதம புகையிரத நிலையத் தலைவரிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்ளுமாறு அவர் வேண்டிக்கொள்றார்.

## மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 1 கோடி 2 1/2 லட்சம் ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட வேலைகளுக்காக ஒரு கோடியே இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளபோதிலும் நால்வருக்கு தலா இருபத்தைந்து லட்சம் என திறைசேரி நிதி ஒதுக்கியுள்ளது.

மிகுதி பன்னிரண்டரை லட்

6-ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகால சட்டவிதி

முல்லைத்தீவில்

## ஒப்பந்தக்காரர் இன்மையால் அபிவிருத்தி வேலைகள் தாமதம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கென கல்வியமைச்சினால் ஒதுக்கபட்ட நிதி மூலம் தற்போது மேற்கொள்ளப்படும் பணிப்பாளர் பணிமனைக் கட்டட வேலை

ரூபாவையும் தகுந்த முறையில் பிரயோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதில் எழுபத்தைந்து லட்சம் ரூபா தளபாடங்களுக்கும், நாற்பத்திரண்டு லட்சம் ரூபா கட்டட வேலைகளுக்

(6ம் பக்கம் பார்க்க)

நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

மேலும் அவர் தொடர்ந்து பேசுகையில், ஆறாவது திருத்தச்சட்டம் நீக்குவது தொடர்பாக பெரும்பான்மை வாக்குகள் பெறுதல் என்பதில் சில சமயங்களில் நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படலாம். ஆனால் சகல எதிர்க்கட்சிகளும், ஆளும் கட்சியும் இவ் விடயத்தில் ஒன்றிணைந்து தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுகின்ற பணியில் ஒத்துழைத்து இந்நாட்டில் அனைத்து மக்களுக்கும் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவதில் தடைக் காரணியாக உள்ள

(6ம் பக்கம் பார்க்க)

மேலும் அவர் இவ் விடயம் பற்றி கூறுகையில் இலங்கை இராணுவ அதிகாரிகள் தம்முடன் வித்தியாசமான எதுவித பேச்சுக்களிலும் ஈடுபடவில்லையென உறுதிபட கூறினார். (லோ)

# மட்டக்களப்பு மாவட்டத்திற்கு 1 கோடி $2\frac{1}{2}$ லட்சம் ஒதுக்கீடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இவ்வருடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்ட வேலைகளுக்காக ஒரு கோடியே இரண்டரை லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம் மாவட்டத்தில் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளபோதிலும் நால்வருக்குதலா இருபத்தைந்து லட்சம் என திறைசேரி நிதி ஒதுக்கியுள்ளது.

மிகுதி பன்னிரண்டரை லட்

6–ஆம் பக்கம் பார்க்க)

# அவசரகால சட்டவிதி 24 மணிநேரம் நீக்கம்

(கொழும்பு)

அவசரகால சட்ட விதியின் பன்னிரண்டாவது பிரிவு இம் மாதம் 30 ஆம் திகதி நள்ளிரவுமுதல் இருபத்திநான்கு மணிநேரம் நடைமுறையில் இருக்கமாட்டாது என ஜனாதிபதி விசேட வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

இதன்படி 30 ஆம் திகதி நள்ளிரவு முதல் இருபத்திநான்கு மணி நேரத்தில் ஊர்வலங்கள் கூட்டங்கள் நடாத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா கச்சேரி

# மதிய சாப்பாட்டு நேரம் 1/2 மணி நேரமாகக் குறைப்பு

(வவுனியா

கச்சேரி ஊழியர்களுக்கு ஒரு மணித்தியாலம் வழங்கப்பட்டு வந்த சாப்பாட்டு நேரம் அரைமணியாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான சுற்றறிக்கை வவுனியா அரசாங்க அதிபருக்கு அனுப்பப் பட்டுள்ளது.

வவுனியா கச்சேரி சிற்றுண்டிச் சாலையில் மதியச் சாப்பாடு இல்லை. இதனால் வெளியிடங்களில் இருந்து வந்து தொழில் புரியும் கச்சேரி ஊழியர்கள் நகரப்பகுதி சாப்பாட்டுக் கடைகளுக்குச்

(6-ஆம் பக்கம் பார்க்க)

முல்லைத்தீவில்

# ஒப்பந்தக்காரர் இன்மையால் அபிவிருத்தி வேலைகள் தாமதம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்கென கல்வியமைச்சினால் ஒதுக்கபட்ட நிதி மூலம் தற்போது மேற்கொள்ளப்படும் பணிப்பாளர் பணிமனைக் கட்டட வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதேபோல முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட நூற்றிப்பதினேழு லட்சம் ரூபாவையும் தகுந்தமுறையில் பிரயோகிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதில் எழுபத்தைந்து லட்சம் ரூபா தளபாடங்களுக்கும், நாற்பத்திரண்டு லட்சம் ரூபா கட்டட வேலைகளுக்

(6ம் பக்கம் பார்க்க)

## நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

இன்று புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம்மக்களுக்கு எமது நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களைத் நெரிவித்துக் கொள்ளுகின்றோம் (ஆ-ர்)

# அநீதியின் காரணமாகவே இளைஞர்கள் ஆயுதம் ஏந்தினர் - தலப்பதி

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியின் காரணமாகவே தமிழ்மக்கள் ஆயுதம் ஏந்தவேண்டிய நிலை ஏற்பட்டது.

இவ்வாறு கடற்றொழில் ராஜாங்க அமைச்சர் தலப்பதி பாராளுமன்றத்தில் நேற்றுக் கூறினார்.

அவசர கால விதிகளை ஒரு மாத காலம் மேலும் நீடிப்பது தொடர்பான விவாதம் நேற்று சபையில் நடைபெற்றது.

அமைச்சர்கள் சந்திரா பண்டார உரையாற்றுகையில் நாட்டில் அமைதி குலைந்ததால் எமது பொருளாதாரம் பாதிக்கப்பட்டது. இளைஞர் மத்தியில் அமைதியின்மை அதிகரித்தது. எனவே சமுதாயத்தில் ஒற்றுமையை ஏற்ப

( 6ஆம் பக்க பார்க்க )

## 70 பேரைக் கொன்ற 19 வயது இளைஞன்

(கொழும்பு)

திரு. தேவிஸ் குருகே, திருமதி ஜெபவர்த்தனா, திரு.கே.குணரட்ணம் உட்பட எழுபது பேரைக் கொலை செய்ததை ஒப்புக்கொண்ட 19 வயது இளைஞன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா தெரிவித்துள்ளார்.

ஜே வி பியால்

# கோல்லப்பட்டோருக்கு அரசாங்கம் பண உதவி

(கொழும்பு)

ஜே. வி. பி. இயக்கத்தினரால் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பத் தலைவர்களை இழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் குறிப்பிட்ட தொகைப் பணத்தை வழங்கவுள்ளது.

இதன்படி அவர்களின் குடும்ப எண்ணிக்கையின்படி இந்தப் பணம் வழங்கப்படும்.

குடும்பத்தில் ஒருவரானால் முந்நூறு ரூபா, ஐந்து அல்லது அதற்கு மேற்பட்டவரானால் ஐநூறு ரூபாவும் வழங்கப்படும்

(6ம் பக்கம் பார்க்க)

# “ஆயுதம், வன்செயலில் எனக்கு நம்பிக்கையில்லை” ---பிரேமதாசா

(கொழும்பு)

கல்விமான்களின் ஆலோசனைகளுக்கிணங்க நாம் சமாதானமாகவும், ஐக்கியத்துடனும் எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு வருகின்றோம் என்பதை உலக நாடுகளுக்கு விளக்கவேண்டும்.

இவ்வாறு ஜனாதிபதி ஆர் பிரேமதாசா நேற்று கொழும்பில் நடைபெற்ற மதவைபவம் ஒன்றில் கூறினார்

ஆயுதத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. அதேபோல வன்செயல், மோதல் என்பனவற்றிலும் நம்பிக்கையில்லை.

தவறு செய்தவர்களை புத்த பெருமானின் கொள்கைப்படி நல்லவர்களாக மாற்றமுடியும் என்றும் அவர் கூறினார்

# புகையிரதத்தில் அனாதரவாக வானொலிப் பெட்டி

யாழ்ப்பாணம்

யாழ்-கொழும்பு ரயிலிலிருந்து அனாதரவான வானெலிப் பெட்டி ஒன்று கண்டெடுக்கபட்டுள்ளது வெள்ளவத்தையை சேர்ந்த கணசரவணபவான் என்பவரால் கண்டெடுக்கபட்ட இந்த வானெலிப்பெட்டி யாழ் பிரதம புகையிரத நிலையத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இவ் வானெலிப்பெட்டியின் உரிமையாளர் தகுந்த ஆதாரங்களுடன் பிரதம புகையிரத நிலையத் தலைவரிடமிருந்து நேரடியாக பெற்றுக்கொள்ளுமாறு அவர் வேண்டிக்கொள்றார்.

# யாழ். மாநகர சபை பிரதேச அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகர சபை பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கென புதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

இந்நிதி ஒதுக்கீடுகள் பின்வரும் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படும் என யாழ் மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

முப்பது லட்ச இலங்கை ரூபா யாழ் மத்திய நவீன சந்தையை புனரமைப்யதற்கெனவும் ரூபா நாற்பத்தைந்து லட்சம் யாழ் மாநகர சபை பிரதேசங்களுக்குட்பட்ட பதினெரு வீதிகளைப் புனரமைக்கவெனவும் யாழ் மாநகரசபைக்குள் நீர்வழங்கல் திட்டத்தை மேம்படுத்தவென இருபது லட்சரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் திரு வீ.பி பாலசிங்கம் தெரிவித்துள்ளார். (லோ

# நோன்புப் பெருநாள் தொழுகை,குத்பா பிரசங்கம்

(யாழ்ப்பாணம்)

றம்ழான் மாதம் மு வதும் நோன்பு நேற்று இன்றைய தினத்தை ஈத்துல் பிதர் பெருநாளாக முஸ்லீம்கள் கொண்டாடுகிறார்கள்.

யாழ்ப்பாணத்தில் நோன்புப் பெருநாள் தொழுகையும்,குத்பா பிரசங்கமும் மஸ்ஜீதுல் முஹம்மதியா (புதுப் பள்ளிவாசல்),புதிய முஹிதீன் பள்ளி பெரிய முஹிதீன் பள்ளி பெரியகடைஜும்மாபள்ளிவாசல்களில்இன்றுநடைபெறும்

# இந்திய இராணுவ சட்டவிரோதம் மின்பாவனை, $2\frac{1}{2}$ கோடி நட்டம்

(கொழும்புத்துறை)

இந்திய இராணுவம் யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து மின்சாரத்தைப் பாவித்ததால் பத்து மில்லியன் ரூபாவுக்கு மேல் மின்கட்டணம் மின்சார சபைக்கு உள்ளூராட்சி சபைனர் செலுத்தவேண்டியுள்ளது என யாழ்மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ், டிவகலாலா தெரிவித்துள்ளார்.

1983 முதல் 1989ஆம்ஆண்டு வரை நாட்டு நிலமைகளால் சட்டவிரோதமாகவும், மின்மானிகளில் மோசம் செய்தும் பொதுமக்கள் மின்சாரத்தை பெற்றதால் மொத்தமாக 129 மில்லியன் ரூபா மின் நிலுவையாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மின்சார சபையின் கட்டணம் கோரும் கடிதம் கிடைத்ததும் உள்ளூராட்சி சபைகளால் உடனுக்குடன் பணம்

(6-ஆம் பக்கம் பார்க்க)

# மேற்பார்வையாளருக்கு நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயலகம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மேற்பார்வை உத்தியோகஸ்தர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 29-4-90 ஞாயிற்றுக்கிழமை காலை 9-00 மணிக்கு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி யாழ். மாவட்ட செயலகம் கோண்டாவி

(6-ஆம் பக்கம் பார்க்க)

## மொழித்தேர்சிக்கு 500 ரூபா அலவுன்ஸ்

(வவுனியா)

ஒன்றுற்க்கு மேற்பட்ட மொழிகளில்தேர்ச்சி பெற்ற அரச ஊழியர்கட்கு 500 ரூபா விசேடகொடுப்பனவு வழங்கப்படஉள்ளது.

இதற்கான சுற்றறிக்கையொன்று வவுனியா கச்சேரிக்கு அனுபப்பட்டுள்ளது.

நேற்றுப் பதிவு செய்தவர்கள் மட்டும்

# யாழ்.நகர வீடமைப்புக் கடன் படிவம் திங்கள் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

1990 - 1994 15 இலட்சம் வீடமைப்புத் திட்டத்தின்கீழ்க் குறைந்த வருமானமுடைய நகரவாசிகள் நகர வீடமைப்பு உபயோகத் திட்டத்தின் கீழ் வீடமைப்புக்கடன்பெற விரும்பின் பதிவு செய்துகொளள விரும்பும் விண்ணப்பப்படிவங்கள் தற்சமயம் யாழ். மாநகரசபையால் வழங்கப்படுகிறதென்றும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களைத் திரும்பப் பெறுவதற்கு 26 ஆம் திகதி வியாழக்கிழமை கடைசி நாளல்ல என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் வி. பி.பாலசிங்கம் ஈழநாதத்துக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தேசிய வீடமைப்பு அதிகார சபை யாழ்.மாநகரசபை

(6ம் பக்கம் பார்க்க)

# இலங்கை வங்கியினால் பல கடன் திட்டங்கள் அமுல்

(தெல்லிப்பளை)

கடந்த காலங்களில் எமது மண்ணில் ஏற்பட்ட துயரம் மிக்க நிகழ்வுகளால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் சிறுகைத்தொழிலாளர்கள் வர்த்தகர்கள் போன்றவர்கள் இலங்கை வங்கியில் பெற்ற கடனை மீளச் செலுத்த முடியாத நிலையில் எம்மை அணுகிய போது மனித நேய அடிப்படையில் கடன்களைமீள அட்டவணைப்படுத்தியும், வட்டிச் சலுகைகளை வழங்கியும் அவர்களுக்கு உதவியுள்ளோம். அதே வேளையில் தாம் பாதிக்கப்பட்டவர்கள் எனக் கூறிக்கொண்டு எம்மையும் அணுகாமல், கடனையும் மீளச் செலுத்தாமல் இருப்பவர்களை வங்கியை ஏமாற்றுபவர்களாகவே கருத வேண்டியுள்ளது.

இவ்வாறு இலங்கை வங்கி யாழ். மாவட்ட முகாமையாளர் திரு. க. கணேசமூர்த்தி இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் அதன் முகாமையாளர் திரு.எம்.பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற சுய தொழில் முயற்சிக்கடன் திட்ட அங்குரார்ப்பண விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவர் மேலும் தனதுரையில் வங்கிக்கடனை ஒழுங்காக மீளச்செலுத்துவதன்மூலம்சிறு முதலீட்டாளர் கள்கூட பெரும் பணமீட்ட முடியும். இலங்கை வங்கி உங்கள் நண்பனாகவே விளங்குகின்றது என்றார்

சிறப்புரையாற்றிய இலங்கை வங்கியின் யாழ்.மாவட்டக் காரியாலயத்தைச் சேர்ந்த கே.பாலசுப்பிரமணியம் தனதுரையில் கடந்த காலங்களில் இந்நாட்டு மக்களின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக இலங்கை வங்கி அறிமுகம் செய்த கடன் திட்டங்களிலிருந்து நாம் பெற்ற அனுபவங்களின் வாயிலாகத்தற்போதுகடன் வழங்கலில் பல புதிய அணுகு முறைகளைத் தோற்றுவித்துள்ளோம்.

கிராமியமட்டத்திலும், நகரப்புறங்களிலும் இயங்கும் சமூகநலஅமைப்புக்களினூடாகக்கடன் பெறுபவர்களை இனங்காணவும், அவ்வப்பிரதேசங்களிற்கு பொருத்தமான தொழில் முயற்சிகள், காணப்படுகின்ற மூலவளங்கள் பற்றிய தேடல்களை மேற்கொண்டு கடன் வசதிகளை மேற் கொள்ளல் இதிலொன்றாகும். சமூகக்கடன் வழங்குனர் திட்டம், வறுமை ஒழிப்புக்குகடன் திட்டம், போன்ற பல கடன் திட்டங்களை இலங்கைவங்கி அறிமுகம் செய்துள்ளது என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தெல்லிப்பளை அரசாங்க கால்நடை வைத்திய அதிகாரி திருமதி. சுமணதேவி தனபாலசிங்கம் தனதுரையில் இன்று கால்நடை வளர்ப்பானது விஞ்ஞான பூர்வமாகத் தொழில்நுட்பங்களைப் பிரயோகித்தும் சிக்கனமான முறையிலும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார்.

சன்மார்க்கசபைத் தலைவர் கலாகேசரி ஆ தம்பித்துரை இலங்கை வங்கி சுன்னாகம் கிளையைச் சேர்ந்த வி.எஸ். விவேகானந்தசர்மாஎஸ்குமாரலிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்.

குரும்பசிட்டி சன்மார்க்க சபை,இடைக்காடு சனசமூக நிலையம் ஆகியன வற்றின் சிபார்சில் இருபத்தேழு பேருக்கு கடன் வழங்கப்பட்டன. (26)

# ‘நடந்து வந்த பாதை’க்கு வவுனியாவில் படப்பிடிப்பு

(வவுனியா)

வவுனியா தமிழ் மகா வித்தியாலய மாணவர்களினால் கடந்த செவ்வாய்க் கிழமை ‘நடந்து வந்த பாதை’என்ற தலைப்பிலான வீடியோ படத்தின்படப்பிடிப்பாரம்பமானது

ஆறு மாணவர்கள், இந்திய இராணுவத்தினர் போன்று ஒப்பனை செய்து நடிப்பில் ஈடுபட்டனர்.

வவுனியா பஜார் வீதியில் உள்ள புடவைக் கடைகளிலும், வேறு கடைகளிலும் இந்தியப் படையினர் பொருட்கள் கொள்வனவு செய்வது போன்று காட்சி எடுக்கப்பட்டது.

இந்த நடிகர்களைக் கண்ட மக்கள் ஆர்வத்தில் கலைஞர்களைச் சுற்றிக் கூடி விட்டனர்.

கலைஞர்கள் இந்தியப் படையின் சீருடைகளை அணிந்து, தலையில் கறுப்புத் துணிகளைக் கட்டியிருந்தனர்.

கடைக் காரர்களிடம் இந்தி தமிழ் ஆங்கிலம் போன்ற வார்த்தைகளைப் பிரயோகித்தனர். (தி)

## கோமாரி நோயினால் 10 மாடுகள் மரணம்

(வவுனியா)

பெரியதம்பனை பகுதியில் கோமாரி நோயினால் பத்து மாடுகள் இறந் துள்ளன.

ஏனைய மாடுகளுக்கும் இந்நோய் பீடிக்காமல் இருப்பதற்காக வவுனியா கால் நடை பண்ணையாளர்கள் கூட்டுறவு சங்கத்தால் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

இந் நோய் பற்றி பெரிய தம்பனை மக்கள் வவுனியா மிருக வைத்தியசாலை அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளனர். (தி)

## கலாகேசரியின் நூல்வெளியீடு

வடமாநில சித்திர வித்தியாதி காரியும், குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவருமான கலாகேசரி. ஆ. தம்பித்துரையின்ஐம்பத்தெட்டாவது பிறந்தநாளை முன்னிட்டு குரும்பசிட்டி சன்மார்க்கசபை கலாகேசரி எழுதிய பண்பாட்

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(கிளிநொச்சி)

அமரர் சந்திரசேகரம் கதிரவேலுவின் 3வது வருட ஞாபகார்த்த உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி 24ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்பமாகி 30ஆம் திகதி திங்கட் கிழமை வரை நடைபெறும்.

ஆனையிறவிலுள்ள இலங்கை தேசிய உப்புக்கூட்டுத்தாபன விளையாட்டரங்கில் விளையாட்டுக் குழுத் தலைவர் திரு ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

உதைபந்தாட்டப் போட்டியில் உப்புக்கூட்டுத்தாபனவட பிராந்திய முகாமையாளர் திரு எஸ். வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினாக திருமதி இராசலட்சுமி கணபதிப்பிள்ளையும்கலந்து கொள்வார்கள்

விளையாட்டுப் போட்டியை மேற்படி உப்புக்கூட்டுத்தாபன

# பாண் பேக்கரிக்காரர், வாகனங்களின் உரிமையாளர்

## உணவு அமைச்சர் குற்றச்சாட்டு

நானூற்றி ஐம்பது கிராம் பாணை தயாரித்து ஐந்து ரூபா தொண்ணூறு சதத்துக்கு விற்கவேண்டும் என்று உணவு கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி கொழும்பு மாவட்ட பேக்கரி உரிமையாளர்களிடம் தெரிவித்தார்,

சில பேக்கரி உரிமையாளர்களின் நடவடிக்கைகளுக்கும் அமைச்சர் கண்டனம் தெரிவித்தார்.

பல பேக்கரிக்காரர்கள், லொறி, வான் என்பவற்றை வைத்திருப்பதாக கூறிய அவர் பாண் தயாரிப்பதில் நட்டம் ஏற்படுவதாக கூறமுடியாது என்றார்.

## தொடர்ச்சியாக வேலை

(தீவுப்பகுதி)

வேலணைகிராமிய ஆஸ்பத்திரியில் ஒரு பெண் பரிசாரகர் தொடர்ச்சியாக நூற்றி நாற்பத்திநாலு மணித்தியாலங்கள் கடமையாற்றிச் சாதனை படைத்துள்ளார்.

இதற்கு காரணம் இவ்வைத்தியசாலையில் கடமையாற்றும் சில பெண் பரிசாரகர்கள் தொடர்ச்சியாக சுகவீன லீவு எடுப்பதேஎனக்கூறப்படுகிறது

லீவுஎடுக்கும்ஊழியர்கள்தமதுலீவு முடிந்து ஆஸ்பத்திரிக்கு சமுகமளிக்கும் போது தான் முன்னையசாதனை ஊழியருக்குலீவு கிடைக்கின்றதெனவும் தெரிவிக்கப்படுகிறது. (15)

## குழாய்க்கிணறு இயந்திரம்

(தெல்லிப்பழை)

வலிகாமம் வடக்குப் பிரதேச ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசம் யாழ்ப்பாணம் யூரோவில் ஸ்தாபனத்தாரால் உருவாக்கப்பட்ட குழாய்க் கிணறு அடிக்கும் இயந்திரம் ஒன்றைச் சொந்தமாகக் கொள்வனவு செய்துள்ளனர்.

இவ்வியந்திரம் மூலம் முதலாவது குழாய்க்கிணறு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானக் காணியில் அடித்துக் கொடுக்கப்படவுள்ளது.

இம்மாதம் இருபத்தொன்பதாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11-30 மணிக்கு வலி வடக்கு பிரதேச ஐக்கிய நாணயசங்கங்களின் சமாசத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெறும். (26)

## க.பொ.த (சா. த) திருத்தவேலை

# கட்டிட வேலை விடைத்தாள்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் ஐந்து புள்ளியிடும் நிலையங்களில் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை விடைத்தாள்கள் புள்ளியிடும் வேலைகள் துரித கதியில் நடைபெறுகின்றன.

இதேவேளை சில விடைத்தாள் பொதிகள் இதுவரை திறக்கப்படாது ஓரிரு புள்ளியிடும் நிலையங்களில் கவனிப்பாரற்றுக் கிடக்கின்றனவாம்.

கற்பகை நெறியான கட்டிட வேலை (மேசன் வேலை) விடைத்தாள் பொதிகள் புள்ளியிடும் திட்டம் கொழும்பிலிருந்து வராததால் உடைக்கப்படாது உள்ளன.

இம்மாதம் 30 ஆம் திகதியளவில் விடைத் தாள்கள் புள்ளியிடும் வேலைகள் முடிவுற்றதும், திறக்கப்படாத பொதிகள் பரீட்சைத் திணைக்களத்துக்கு திருப்பி அனுப்பப்படவிருக்கிறது.

பரீட்சார்த்திகளின் பரீட்சைப் பெறுபேறுகள் காலதாமதமாகி வரலாம்.

## பற்றைக்குள் நீரிறைக்கும் இயந்திரம்

(வவுனியா)

தாண்டிக்குளம், குளவெளியில் உள்ள பற்றைகளின்கீழே ஒழித்து வைக்கப்பட்ட நிலையில் சிக்மா நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

இந்த இயந்திரம் தாண்டிக்குளம் இணக்க சபைப் பிரிவுத் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டு இதன் உரிமையாளரிடம் கொடுக்கப்பட்டது.

சில மாதங்களுக்குமுன் இந்த இயந்திரம் கொள்ளையடிக்சப்பட்டது என்றும் பல நாட்களாக இது பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்திருக்க

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

சீயாக்காய், அரிசி, பயறு வந்தயம் ஆகிய நான்குந் க்கைப் பொருட்கள் அடங்கிய சீயாக்காய் பவுடர் எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம் MGM.NO. 777 K. K. S. ROAD, JAFFNA. (B/ 764)

யாழ் நகரில் சகலவிதமான வணிக்கூடுகளையும் உத்தரவாதத்துடன் ‘திருத்திக் கொள்ள DILKA WATCH WORKS, Opposite Bus and, Jaffna (குறிப்பு) சகல சீக்கோ’ சிற்றிசன் உதிரிப்பாகங்களும் கையிருப்பில் உண்டு

சஞ்சிகை ஓடர்

மீண்டும் ஈழநாதம், மங்கை, அம்புலி மாமா, ஆனந்த விகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினமாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன்,யூனியர் போஸ்ட், இந்தியாருடே (தமிழ் – ஆங்கிலம்), FRONT LINE, SPORT STAR மற்றும் ஏனைய எல்லா இலங்கை, இந்திய சஞ்சிகைகளும் மீண்டும் பதிவு செய்யப்படுகின்றன V.P.Pயிலும் பெற்றுக் கொள்ளலாம். ஸ்ரீ காந் புத்தகசாலை, இல. 165, மின்சார நிலைய வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். (B.825)

பின் போடப்பட்டுள்ளது

கொற்றாவத்தை கலைவாணி சனசமூக நிலையத்தினால் விற்பனை செய்யப்பட்ட அபிவிருத்திநிதிஅதிஷ்ட இலாபச் சீட்டு மறு அறிவித்தல் வரை பின்போடப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். கொற்றாவத்தை சனசமூக நிலைய நிர்வாகிகள். (–R394)

## எயர் லங்கா பணிப்பெண் கடத்தல் முயற்சி

(கொழும்பு)

ஏழு லட்சம் ரூபா பெறுமதியான கரன்சி நோட்டுக்களைக் கடத்த முயன்ற எயர் லங்கா விமானப் பணிப்பெண் ஒருவர் சுங்கப் பகுதியினரிடம் வகையாகப் பிடிபட்ட சம்பவம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்றுள்ளது

யாழ்நகரில் இன்றைய சினிமா

வின்ஸர்-யாழ்
தினசரி 4-00, 6-45, 9-45
சனி ஞாயிறு விடுமுறை நாட்களில்
10·30, 2.30, 6.30
பாக்கியராஜ் சோபனா
இது நம்ம ஆளு
(புதிய வெளியீடு)

நியூ சாந்தி (யாழ்)
தினசரி 4.00, 6.45, 9.30
ஜெயசங்கர், முத்துராமன் லட்சுமி, நாகேஸ் நடித்த
கண்ணன் வருவான்
(புதிய பிரதி)

மனோகரா - (யாழ்
தினசரி 4.00, 6.45, 9.45
ஜெய்சங்கர் ராஜஸ்ரீ நிர்மலா நாகேஸ் நடித்த
நீதிதேவன்
புதிய பிரதி

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
105 நாள் வெற்றிநடை போடுகிறது
ராஜாதி ராஜா
(கலர்)

## மரண அறிவித்தல் சலுகைக் கட்டணம்

‘ஈழநாதம்’ பத்திரிகை வசதி குறைந்த மக்களுக்கும் மரணச் செய்தியை மற்றவர்களுக்கும் அதிக செலவில்லாமல் தெரிவிப்பதற்கு சலுகை அளிக்க முன்வந்துள்ளது ஐம்பது சொற்களுக்கு மேற்படாத மரண அறிவித்தல் விளம்பரத்துக்கு நூறு ரூபாய் மட்டுமே அறவிடப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளம்பர முகாமையாளர்
ஈழநாதம்

தினால் விற்பனை செய்யப் பட்ட அபிவிருத்திநிதிஅதிஷ்ட இலாபச் சீட்டு மறு அறிவித் தல் வரை பின்போடப்பட் டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம். கொற்றா வத்தை சனசமூக நிலைய நிர்வாகிகள். (-R394)

## எயர் லங்கா பணிப்பெண் கடத்தல் முயற்சி

(கொழும்பு)

ஏழு லட்சம் ரூபா பெறுமதி யான கரன்சி நோட்டுக்களைக் கடத்த முயன்ற எயர் லங்கா விமானப் பணிப்பெண் ஒருவர் சுங்கப் பகுதியினரிடம் வகை யாகப் பிடிபட்ட சம்பவம் கட்டுநாயக்கா விமான நிலை யத்தில் இடம்பெற்றுள்ளது

காரியாலயத்தைச் சேர்ந்த கே.பாலசுப்பிரமணி யம் தனதுரையில் கடந்த காலங்களில் இந்நாட்டு மக்க ளின் சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக இலங்கை வங்கி அறிமுகம் செய்த கடன் திட்டங்களிலிருந்து நாம் பெற்ற அனுபவங்களின் வாயி லாகத்தற்போதுகடன் வழங்க லில் பல புதிய அணுகு முறை களைத் தோற்றுவித்துள் ளோம்.

கிராமியமட்டத்திலும்; நக ரப்புறங்களிலும் இயங்கும் சமூகநலஅமைப்புக்களினூடா கக்கடன் பெறுபவர்களை இனங்காணவும், அவ்வப்பிர தேசங்களிற்கு பொருத்தமான தொழில் முயற்சிகள், காணப் படுகின்ற மூலவளங்கள் பற்றிய தேடல்களை மேற் கொண்டு கடன் வசதிகளை

தற்காக வவுனியா கால் நடை பண்ணையாளர்கள் கூட்டுறவு சங்கத்தால் தடுப்பூசி போடப் பட்டு வருகிறது.

இந்நோய் பற்றி பெரிய தம்பனை மக்கள் வவுனியா மிருக வைத்தியசாலை அதி காரிகளுக்கு அறிவித்துள் ளனர். (தி)

## கலாகேசரியின் நூல்வெளியீடு

வடமாநில சித்திர வித்தி யாதி காரியும், குரும்பசிட்டி சன்மார்க்க சபைத் தலைவரு மான கலாகேசரி. ஆ. தம்பித் துரையின்ஐம்பத்தெட்டாவது பிறந்தநாளை முன்னிட்டு குரும்பசிட்டி சன்மார்க்கசபை கலாகேசரி எழுதிய பண்பாட் டின் மூன்று கோலங்கள் என்ற நூலை வெளியிடவுள்ளது. இந்நூல் வெளியீடுமே6ம்திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு சன்மார்க்கசபை மண்டபத்தில் கலைப் பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரைதலை மையில் நடைபெறும்.

யாழ்ப்பகண மாவட்டக் கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் நூலை வெளி யிட் வைக்க திரு. சு. ஸ்ரீ பாஸ்கரன் முதற் பிரதியி னைப் பெறுவார்.

யாழ். பல்கலைக்கழக வர லாற்றுத் துறையைச் சேர்ந்த கலாநிதி சி. க. சிற்றம்பலம், அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் இ. ஜெய ராஜ் ஆகியோர் நயவுரை வழங்குவர். (26)

அமரர் சந்திரசேகரம் கதிர வேலுவின் 3வது வருட ஞாப கார்த்த உதைபந்தாட்ட சுற் றுப்போட்டி 24ஆம் திகதி செவ்வாய்க் கிழமை ஆரம்ப மாகி 30ஆம் திகதி திங்கட் கிழமை வரை நடைபெறும்.

ஆனையிறவிலுள்ள இலங் கை தேசிய உப்புக்கூட்டுத் தாபன விளையாட்டரங்கில் விளையாட்டுக் குழுத் தலை வர் திரு ஜி. எம். செபஸ்தி யாம்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

உதைபந்தாட்டப் போட்டி யில் உப்புக்கூட்டுத்தாபனவட பிராந்திய முகாமையாளர் திரு எஸ். வேலாயுதபிள்ளை பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினாக திருமதி இராசலட்சுமி கணபதிப்பிள் ளையும்கலந்து கொள்வார்கள்

விளையாட்டுப் போட்டியை மேற்படி உப்புக்கூட்டுத்தாபன உற்பத்தி முகாமையாளர் திரு வ. கருணானந்தன் ஆரம்பித் து வைப்பார்.

## சட்டவிரோத மின்பாவனை அதிகரிப்பு

தீவுப்பகுதியில் தொடர்ந்து சட்ட விரோத மின் பாவ னையாளர்கள் அதிகரித் துள்ளது இதன் காரணமாக இப்பகுதிகளில் அடிக்கடி மின்தடைகள் ஏற்பட்டவண் ணம் உள்ளன.

பிரதான வீதிகள் தவிர சிறு ஒழுங்கைகள் ஊடாக பலர் சட்டவிரோத மின் சாரத்தைப் பெற்று பாவித்து வருகின்றார்கள் சில இடங் களின் கவரீடப்படாத செம் புக்கம்பிகளின் மூலம் நீண்ட தூரத்திற்கு மின்சாரம் பெற ப்படுகின்றது.

புள்ளியிடும் நிலையங்களில் க. பொ. த. (சாதாரணம்) பரீட்சை விடைத்தாள்கள் புள்ளியிடும் வேலைகள் துரித கதியில் நடைபெறுகின்றன.

இதேவேளை சில விடைத் தாள் பொதிகள் இதுவரை திறக்கப்படாது ஓரிரு புள்ளி யிடும் நிலையங்களில் கவ னிப்பாரற்றுக் கிடக்கின்றன வாம்.

கற்பகை நெறியான கட்டிட வேலை (மேசன் வேலை) விடைத்தாள் பொதிகள் புள்ளியிடும் திட்டம் கொழும் பிலிருந்து வராததால் உடைக்கப்படாது உள்ளன.

இம்மாதம் 30 ஆம் திகதியள வில் விடைத் தாள்கள் புள்ளி யிடும் வேலைகள் முடிவுற்ற தும், திறக்கப்படாத பொதி கள் பரீட்சைத் திணைக்களத் துக்கு திரும்பி அனுப்பப்பட விருக்கிறது.

இதனால், இக்கற்கை நெறி யைப் பாடமாக எடுத்த

## வவுனியாவில் தேனிசைநிகழ்ச்சி

(வவுனியா)

எதிர்வரும் இருபத்தொன் பதாம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியாவில் தேனி சைச் செல்லப்பாவினால் நடா த்தப்படவிருக்கும் இசை நிகழ் ச்சிகளுக்கான ஒழுங்குகளை வவுனியாமாவட்ட விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி யினர் செய்து வருகின்றனர்.

வவுனியா பழைய நகரசபை அரங்கில்இந்நிகழ்ச்சிகள்நடை பெறும். தேனிசைச் செல்லப பாவுடன் பின்னணிப் பாடகி சொர்ணலதாவும் மேற்படி இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவிருக்கின்றார். (தி

மாகி வரலாம்.

## பற்றைக்குள் நீரிறைக்கும் இயந்திரம்

(வவுனியா)

தாண்டிக்குளம், குளவெளி யில் உள்ள பற்றைகளின் கீழே ஒழித்து வைக்கப்பட்ட நிலை யில் சிக்மா நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்று மீட்கப்பட் டுள்ளது.

இந்த இயந்திரம் தாண்டிக் குளம் இணக்க சபைப் பிரிவுத் தலைவரிடம் ஒப்படைக்கப் பட்டு இதன் உரிமையாளரிடம் கொடுக்கப்பட்டது.

சில மாதங்களுக்குமுன் இந்த இயந்திரம் கொள்ளையடிக்கப் பட்டது என்றும் பல நாட்க ளாக இது பற்றைக்குள் மறை த்து வைக்கப்பட்டிருந்திருக்க லாம்என்றும் கூறப்பட்டது (தி

### மரண அறிவித்தல் சலுகைக்கட்டணம்

'ஈழநாதம்' பத்திரிகை வசதி குறைந்த மக்களுக் கும் மரணச் செய்தியை மற்றவர்களுக்கும் அதிக செலவில்லாமல் தெரி விப்பதற்கு சலுகை அளிக்க முன்வந்துள்ளது ஐம்பது சொற்களுக்கு மேற்படாத மரண அறி வித்தல் விளம்பரத்துக்கு நூறு ரூபாய் மட்டுமே அறவிடப்படும் என்ப தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

விளம்பர முகாமையாளர்
ஈழநாதம்

## றம்ழானை முன்னிட்டு 100 கைதிகள் விடுதலை

இன்று றம்ழான் திருநாளை முன்னிட்டு நூறு சிறைக்கை திகளுக்கு ஜனாதிபதி ஆர் பிரேமதாசா பொதுமன்னிப்பு வழங்கியுள்ளார்,

போதைவஸ்து தொடர் பான குற்றச்சாட்டின் மீது சிறையில் உள்ளவர்களுக்கு இது பொருந்தாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது

இதன்படி இவர்களில் மர ணதண்டனைக் கைதிகள் சிலருக்கு ஆயுள் சிறையாக மாற்றப்பட்டுள்ளது.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க


## அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ். மாவட்ட தச்சுத் தொழிற்சாலை உரிமையாளர் சங்கம்.

காலம்:- 29-04-90 மு. ப. 9. 30 மணி

இடம்:- யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம்.

மேற்படி யாழ். மாவட்ட தச்சுத் தொழிற் சாலை உரிமையாளர்சங்கம் அங்குரார்ப்பணம் செய்ய இருப்பதால் தொழிற்சாலை உரிமை யாளர்கள் தவறாது சமுகம் கொடுக்கும் வண்ணம் தயவுடன் கேட்டுக் கொள்ளுகின் றோம்.

நன்றி.

190, அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.
23. 04. 90

தற்காலிகத் தலைவர்
மு. ஜெகதீசன்

(R/435)

## அறிவித்தல் மின்தடை

இலங்கை மின்சார சபையால் சில திருத்த வேலைகள் செய்யவிருப்பதால், 29—4—1990 ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை யாழ்ப்பாண மாநக ராட்சி மன்ற எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பி டும் உப மின்நிலையங்கள் தவிர்ந்த ஏனைய உப மின் நிலையங்களிலிருந்து மின்சாரம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பதை முன்கூட்டியே இத்தால் அறியத்தரு கின்றேன்.

மின்சாரம் கிடைக்கும் உப மின் நிலையங்கள்

1. பட்டினப் பிராந்தியம்
2. ஆர். ஜீ.
3. கன்னாதிட்டி
4. ஐந்து சந்தி
5. மனோகரா

வி. பி. பாலசிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(B-843)


**Short Hand & Typing Classes**
(ENGLISH)

- பிரத்தியேக வகுப்புக்கள்
- சிறந்த பயிற்சி
- இலவச ஆங்கில வகுப்பு

விபரங்களுக்கு:
North Ceylon
Technical Institute
14, St Peters Lane,
JAFFNA.

(B,688)



அனைவருக்கும் எமது றம்ழான்
நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்

இல்லத்தரசிகளுக்கு,

அன்புடையீர்,

றம்ழான் நந்நாளை குதூகலத்துடன் கொண்டாடி மகிழ்ந்திட தேவையான பலகார வகைகளை செய்திட எம்மிடம்,

அரிசி மா — குரக்கன் மா — ஆட்டா மா — உழுந்து மா — ஜீவாகாரம் — கடலை மா — மற்றும் — மிளகாய்த்தூள் — மஞ்சள் தூள் — சீரகத்தூள் — மிளகு தூள்

எல்லாவற்றையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**அண்ணா கோப்பிக் கடை**

பெரியகடை, யாழ்ப்பாணம்.

**அண்ணா தொழிலகம்**

இணுவில்.

B/840

# போரைத்தவிர்க்க இந்தியா பாகிஸ்தான் இணக்கம்

(வாஷிங்டன்)

இந்தியா, பாகிஸ்தானில் பதட்டத்தைத் தணிக்கவும், போரைத் தவிர்க்கவும் தகவல் தொடர்பை பராமரிக்கவும் நடவடிக்கைகள் எடுப்பது என இந்திய பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் இணங்கி இருக்கிறார்கள்.

சென்ற புதன் கிழமை நியூயோர்க்கில் இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக பேச்சு நடத்திய பின்பு கூட்டறிக்கை ஒன்று இரு அமைச்சர்களினால் விடப்பட்டது.

மோதலைத் தவிர்க்க இரு நாடுகளின் இராணுவ நடவடிக்கைகளுக்கான டைரக்டர் ஜெனரல்கள் தொடர்பு கொண்டிருக்க வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

இதே வேளை பாகிஸ்தான் தரப்பில் பாகிஸ்தான் ராஜதந்திரிகள் இப் பேச்சு வார்த்தைகள் தமக்கு நம்பிக்கை தருபவையாக இருக்கவில்லை என குறிப்பிட்டிருக்கின்றனர்.

இந்தியாவின் வலது சாரிக் கட்சியான பாரதீய ஜனதாக் கட்சி பிரதமர் வி. பி. சிங்குக்கு கொடுக்கும் நெருக்கடிகள் தமக்குத் தெரியும்என்றும் ஆதலால் காஷ்மீர்ப் பிரச்சினையானது தொடர்ந்து கொண்டே இருக்கும் என்றும் ஆதலால் தான் இப் பேச்சு வார்த்தையில் நம்பிக்கை இடம் பெறவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இதே வேளை ரம்ழான் பெருநாளை ஒட்டி ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருக்கும் வேளையில் தீவிரவாதிகள் சுட்டதில் மேலும் 5பொதுமக்கள் இறந்துள்ளனர்

அத்துடன் இந்தியாவின் எல்லைப்புற பகுதிகளை கண்காணிப்பதற்காக தொண்டர் படை ஒன்றை இந்திய அரசு நியமித்துள்ளது. இத் தொண்டர்படைகள் பஞ்சாப், காஷ்மீர் பிரதேசங்களில நிறுத்தப்படுவார்கள் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## சோவியத் - லித்வேனியா தலைவர்கள் சந்திப்பு

(மொஸ்கோ)

லித்வேனிய தூதுக்குழுவினர் சோவியத் பிரதம மந்திரி நிக்கலாய்லிஸ்கோவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இச்சந்திப்பு தற்செயலாக இடம்பெற்றது என அவர் மேலும் குறிப்பிட்டார். லித்வேனியா சோவியத் உயர்மட்டத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியது இதுவே முதல் தடவையாகும்.

இச்சந்திப்பின் போது சோவியத் பிரதமமந்திரி லித்வேனிய தூதுக்குழுவிடம் லித்வேனிய பிரகடனத்தை ரத்துச் செய்யும் பட்சத்தில்தான் அவர்களுடன் உத்தியோக பூர்வ பேச்சுக்கள் நடத்தப்படும் என்று கூறினார்.

அதேவேளை அமெரிக்கா சோவியத்மீது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் தடையை எடுக்கப் போவதாகக் கூறியது. ஆனால் மீண்டும் தான் இவ்விதமான நடவடிக்கையை எடுக்கமாட்டாது என அறிக்கை விட்டிருப்பது தனக்குப் பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளதாக லயன்ஸ் பேகன் தெரிவித்துள்ளார்.

## அவுஸ்திரேலியா மீது இந்தியா குற்றச்சாட்டு

(கன்பரா)

அவுஸ்திரேலியா 50 மிராஜ் சண்டை விமானங்களை பாகிஸ்தானுக்கு விற்பதன் மூலம் துணைக்கண்டத்தில் பதட்டத்தை அதிகரிப்பதாக இந்தியா குற்றஞ் சாட்டுகிறது.

துணைக்கண்டத்தில் காஷ்மீர் விவகாரம் தொடர்பாக இருநாடுகளுக்கும் இடையில் பதட்டநிலை அதிகரித்திருக்கும் அதேவேளையில் அவுஸ்திரேலியா இப்படி விற்பது முறையற்றது என அவுஸ்திரேலியாவுக்கான இந்தியத் தூதுவர் சுதர்சன்குமார் கன்பராவில் கூறினார்

## நேபாளத்தில் புதிய கூட்டணி அரசுக்கு மன்னர் ஆதரவு

(காட்மண்டு)

நேபாளத்தில் புதிதாக அரசு அமைத்திருக்கும் கூட்டணி அரசுக்கும், பலகட்சி ஜனநாயக முறைக்கும் ஆதரவு தருமாறு மக்களை மன்னர் பிரேந்திரா வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இவ்வாறு இவர் வேண்டுகோள் விடுத்தமை இதுவே முதல் தடவையாகும். அத்துடன் கடந்த சில நாட்களாக நடந்து வரும் கலவரங்களை அடுத்து இடம்பெற்ற பிரதம மந்திரி, மன்னர் சந்திப்பின் பின்னர் மன்னரின் இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

## காங்கேசன்துறை பகுதியில் பிரதானவீதிகள் படுமோசம்

(காங்கேசன்துறை)

காங்கேசன்துறைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் பிரதான வீதிகள் பலசீரழிந்து காணப்படுகின்றன. காங்கேசன் துறை-பலாலி வீதி மயிலிட்டி வரையிலும் வாகனப் போக்குவரத்துக்கு ஒவ்வாத அளவில் பாதை சீரழிந்துள்ளது.

இவ்வீதி கடந்தகால இலங்கை, இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது இராணுவ கனரக, வாகனங்களின் பாவனையால் மிகுந்த பாதிப்புக்குள்ளாகின.

கல்லூரி வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் இருப்பதுடன் அவ்வீதியிலுள்ள மதகு ஒன்றும் இடிந்த நிலையில் இருப்பதால்சைக்கிள் தவிர்ந்த வேறு வாகனங்கள் அவ் வீதியால்செல்லமுடியாமலுள்ளது

இது சம்பந்தமாக பல பொது நல நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுவரை எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. (41)

## யாழ். மாவட்டத்தில் குடியிருப்புக் காணிகளுக்கு பர்மிட் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள காணிப் பகுதியினரால் கடந்த பதினாறு வருடங்களுக்கு முன்பே வழங்கப்பட்ட குடியிருப்புக்காணிகளுக்கும், மத்தியதரவர்க்கத்தவர்களுக்குமான காணிகளுக்கு இன்னும் உறுதிகளோ அன்றி உத்தரவுப்பத்திரங்களோ (பர்மிட்) கூட வழங்கப்படாதிருக்கின்றது.

இலங்கை அரசும் ஜனாதிபதியும் மக்களுக்குக் காணி பகிர்ந்தளித்தலும், உடனடியாகவே உறுதி வழங்கலுமான திட்டத்தினை நடைமுறைப்படுத்த தென்பகுதிகளில் துரிதப்படுத்தியபோதும் யாழ்ப்பாணத்தில் இது பற்றி இன்னும் சிந்திக்காதுள்ள நிலை காணித்துண்டுகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு ஏமாற்றத்தையளித்துள்ளது.

இதுவரை காலமும் நாட்டின் நிலைமையையும், காணிப் பகுதி இயங்காது இருந்தமையினையும் சாட்டாகக் கூறி வந்த அதிகாரிகள் தற்போதைய சூழ்நிலையிலும் இதுபற்றிய நடவடிக்கை எடுக்காதுள்ளமை மேலும் காணி பெற்றவர்களுக்கு ஏமாற்றமளித்துள்ளது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அண்மித்த நிலப் பகுதியும், செல்வநாயகபுரத்துக்கு அண்மித்த பகுதிகளிலுமான அரச காணிகளுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது: (41)

## விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணையாது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியை கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான வாய்ப்பு தற்போதைக்கு இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். பல்கலைக்கழகத்துடன் இராமநாதன் இசைக் கல்லூரி இணைக்கப்பட்டுள்ளது போல் விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகள் பரவலாக எழுப்பப்பட்டது.

விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியில் மாணவர் அனுமதி க. பொ. த. (சாதாரணப்) அடிப்படைக் கல்வி தகமையாகும். ஆனால் இராமநாதன் இசைக்கல்லூரியில க. பொ த (உயர்) அடிப்படை கல்வித் தகமையாகும். இதனாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பட்டதாரி சான்றிதழ் வழங்குவது நடைமுறை சாத்தியமானதல்ல என்ற கருத்துதான் இணைப்புக்கு தடையாக உள்ளது என தெரியவருகிறது.

அதே நேரம் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் கல்வியாண்டு முடியும் வரை புதிய மாணவர்கள் அனுமதி இடம் பெறமாட்டாது என்றும் தெரியவருகிறது.

இராமநாதன் இசைக் கல்லூரியின் அடிப்படை தகைமையுடன் இன்மேல் புதிய மாணவர்கள் அனுமதிக்கப்பட்டு பின்பு கிழக்கு பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (37)

## குடிநீர்க் கிணறுகள் அசுத்தமாக்கப்படுகின்றன

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சாறாப்பிட்டி குடிநீர்க்கிணறுகள் அசுத்தம் செய்யப்படுவதாகப் பொது மக்கள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

மாலை நேரங்களில் இளைஞர்கள் சிலர் கிணற்றுள் மூழ்கிக் குளிப்பதாகவும், அழுக்கான உடைகளைக் கழுவ அக்கிணறுகளைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சம்பந்தபட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென பொது மக்கள் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

வரட்சிக் காலங்களில் குடிநீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதும் உண்டு. நன்னீரைப்பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சித்திரையில் ஒரு மாலை

(யாழ்ப்பாணம்)

இன்றுமாலை 5 00 மணிக்கு சுண்டிக்குளி சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ''சித்திரையில் ஒரு மாலை'' என்னும் இசை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்ச்சி ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை நிதிக்காக ஜோ.நிட்டனால் இலவசமாக தயாரிக்கப்பட்டு கொழும்பு நட்புறவுச் சங்க யாழ்ப்பாணக் கிளையினால் நடாத்தப்படுகிறது.

## விமான நிலைய விஸ்தரிப்பு இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வலையிறவு விமான நிலைய வேலிப் பாதுகாப்பு, மற்றும் விஸ்தரிப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. விமான நிலையத்தில் அமைக்கப்படவிருந்த மாடிக் கட்டிடம் கட்டுவதும் நிறுத்தப்பட்டது.

இந்த விமான நிலையப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் அந்த இடங்களிலிருந்து வெளியேற வேண்டியதில்லை யென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் பெரஸ் குணவர்த்தனா மட்டக்களப்புக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்தபோது விடுதலைப் புலிகள் மக்கள்முன்னணிப்பிரதித் தலைவர் கரிகாலன் சந்தித்து

## "கொழுவி" இழுத்தவர்கள் ஊழியரைத் தாக்கினராம்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச சபை உடுப்பிட்டி உப-அலுவலகப் பகுதயில் சமபரபாகு என்ற இடத்தில் சட்ட விரோத மின் பாவனையைத் தடுக்க சென்ற உப-அலுவலக மின் பகுதி ஊழியர்கள் தாக்குதல்களுக்குள்ளானார்கள் எனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சட்டவிரோத மின்பாவனை தொடர்ந்து அதிகரித்து வருவதால் மின் பாவனையாளர்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் இதற்கு நடவடிக்கை எடுத்து விமோசனம் வழங்க வேண்டுமெனப் புகார்கள் உப-அலுவலகத்திற்குச் சென்றதையடுத்து சட்ட விரோத இணைப்புக்களைக் கண்டு பிடித்து அவற்றினை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மின் பகுதி ஊழியர்கள் மேற்கொண்டனர்.

கொழுவி இழுக்கும் மின் பாவனையைத் தடை செய்யச் சென்ற போது மின் பகுதி ஊழியர்கள் பெண்களாலும் தாக்கப்பட்டதாகவும், மின் ஊழியர்களால் கொண்டு செல்லப்பட்ட வயர்களும் ஊழியர்களிடமிருந்து பறிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. (25)

## பத்து ஆண்டுகளின் பின்

## பழ மரங்களில் தொற்று நோய்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் பழ மரங்களுக்குத் தொற்றி வரும் நோய்களைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை வட

விமான நிலைய
## விஸ்தரிப்பு இல்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வலையிறவு விமான நிலைய வேலிப் பாதுகாப்பு, மற்றும் விஸ்தரிப்பு வேலைகள் நிறுத்தப்பட்டுவிட்டன. விமான நிலையத்தில் அமைக்கப்படவிருந்த மாடிக் கட்டிடம் கட்டுவதும் நிறுத்தப்பட்டது.

இந்த விமான நிலையப் பகுதியில் குடியிருக்கும் மக்கள் அந்த இடங்களிலிருந்து வெளியேற வேண்டியதில்லையென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விமானப் படைத் தளபதி எயர் மார்ஷல் பெரஸ் குணவர்த்தனா மட்டக்களப்புக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்தபோது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப்பிரதித் தலைவர் கரிகாலன் சந்தித்து நடத்திய பேச்சுவார்த்தையின் பின் மேற் கண்டவாறு அறிவிக்கப்பட்டது.

"கொழுவி" இழுத்தவர்கள்
## ஊழியரைத் தாக்கினராம்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேச சபை உடுப்பிட்டி உப-அலுவலகப் பகுதயில் சமபரபாகு என்ற இடத்தில் சட்ட விரோத மின் பாவனையைத் தடுக்க சென்ற உப-அலுவலக மின் பகுதி ஊழியர்கள் தாக்குதல்களுக்குள்ளானார்கள் எனப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் சட்டவிரோத மின்பாவனை தொடர்ந்து அதிகரித்து வருவதால் மின் பாவனையாளாகள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் இதற்கு நடவடிக்கை எடுத்து விமோசனம் வழங்க வேண்டுமெனப் புகார்கள் உப-அலுவலகத்திற்குச் செய்யப்பட்டன.

இதனையடுத்து இப்பகுதிகளில் சட்ட விரோத மின்பாவனைகளைக் கண்டு பிடித்து அவற்றினை நீக்குவதற்கான நடவடிக்கைகளை மின் பகுதி ஊழியர்கள் மேற்கொண்டனர்.

கொழுவி இழுக்கும் மின் பாவனையைத் தடை செய்யச் சென்ற போது மின் பகுதி ஊழியர்கள் பெண்களாலும் தாக்கப்பட்டதாகவும், மின் ஊழியர்களால் கொண்டு செல்லப்பட்ட வயர்களும் ஊழியர்களிடமிருந்து பறிக்கப்பட்டதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது. (25)

ளது போல் விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி கிழக்கு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படல் வேண்டும் என்ற கோரிக்கைகள் பரவலாக எழுப்பப்பட்டது.

விபுலானந்தர் இசை நடனக் கல்லூரியில் மாணவர் அனுமதி க.பொ.த. (சாதாரணம்) அடிப்படைக் கல்வி தகமையாகும். ஆனால் இராமநாதன் இசைக்கல்லூரியில க.பொ.த (உயர்) அடிப்படை கல்வித் தகமையாகும். இதனாலேயே இந்த நிலமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து பட்டதாரி சான்றிதழ் வழங்குவது நடைமுறை சாத்தியமானதல்ல என்ற கருத்துதான் இணைப்புக்கு தடையாக உள்ளது

## அசுத்தமாக்கப்படுகின்றன

(நெடுந்தீவு)

நெடுந்தீவு சாறாப்பிட்டி குடிநீர்க்கிணறுகள் அசுத்தம் செய்யப்படுவதாகப் பொது மக்கள் பலரும் கவலை தெரிவிக்கின்றனர்.

மாலை நோங்களில் இளைஞர்கள் சிலர் கிணற்றுள் மூழ்கிக் குளிப்பதாகவும், அழுக்கான உடைகளைக் கழுவ அக்கிணறுகளைப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து சம்பந்தபட்ட அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென பொது மககள் கேட்டுக் கொள்ளுகின்றனர்.

வரட்சிக் காலங்களில் குடிநீர்த்தட்டுப்பாடு ஏற்படுவதும் உண்டு. நன்னீரைப்பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

## சித்திரையில் ஒரு மாலை

(யாழ்ப்பாணம்)

இன்றுமாலை 5 00 மணிக்கு சுண்டிகுளி சென்ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் ''சித்திரையில் ஒரு மாலை'' என்னும் இசை நிகழ்ச்சி நடைபெறவுளளது.

இந்நிகழ்ச்சி ஜெய்ப்பூர் செயற்கைக்கால் தொழிற்சாலை நிதிக்காக ஜோ.நிட்டனால் இலவசமாக தயாரிக்கப்பட்டு கொழும்பு நட்புறவுச் சங்க யாழ்ப்பாணக் கிளையினால் நடாத்தப்படுகிறது.

யினையும் சாட்டாகக் கூறி வந்த அதிகாரிகள் தற்போதைய சூழ்நிலையிலும் இதுபற்றிய நடவடிக்கை எடுக்காதுள்ளமை மேலும் காணி பெற்றவர்களுக்கு ஏமாற்றமளித்துள்ளது.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அண்மித்த நிலப் பகுதியும், செல்வநாயகபுரத்துக்கு அண்மித்த பகுதிகளிலுமான அரச காணிகளுக்கே இந்நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது: (41)

## பழ மரங்களில் தொற்று நோய்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் பழ மரங்களுக்குத் தொற்றி வரும் நோய்களைத் தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை வடமராட்சிப் பகுதி விவசாயப் போதனாசிரியர்களும், கமநலச் சேவை நிலையங்களின் பெரும்பாக உத்தியோகத்தர்களும் இணைந்து மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதிகளில் உள்ள பழமரங்களுக்கு மருந்து தெளிக்கும் நடவடிக்கைகளை அவர்கள் மேற் கொண்டுள்ளனர்.

இப்பகுதி பழமரங்களுக்கு மருந்து தெளிப்பதற்கான மருந்து தெளி இயந்திரமொன்றை விவசாயத்திணைக்களம் அண்மையில் இங்கு அனுப்பிவைத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது (2

# நெருக்கடியின் மத்தியிலும் தேயிலை வியாபாரம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டு இலங்கையில் அதிகளவு தேயிலை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. உற்பத்தியிலும் சந்தைப்படுத்துவதிலும் சீர்குலைவு ஏற்பட்ட போதிலும் ஆயிரத்து முந்நூறு கோடி ரூபாவுக்கு அதிகமான தொகை வெளிநாட்டு நாணயமாற்றாகப் பெறப்பட்டது.

மொத்தமாக இருபது கோடி எழுபது இலட்சம் கிலோ தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் காலப் பகுதியில் இருபது கோடி நாற்பது இலட்சம் கிலோ தேயிலை ஏற்றுமதி செய்யப்பட்டது,

தேயிலை உற்பத்தியில் இந்தியாவுக்கு அடுத்த இடத்தை இலங்கை தொடர்ந்து வகித்து வருகின்றதென்றும் கூறப்படுகின்றது.

இந்தியாவின் தேயிலை உற்பத்தி அறுபத்தேழு கோடியே எண்பது இலட்சத்திற்கும் கூடுதலானதாகும்.

கடந்த ஆண்டில் உலகில் தேயிலை உற்பத்தியில் மூன்றாவது இடத்தை வகித்த கென்னியா பதினெட்டுக் கோடிக்கும் கூடுதலான தேயிலை உற்பத்தி செய்திருக்கின்றது.

# பத்து ஆண்டுகளின் பின் கமநல குழுத் தேர்தல்கள்

ஒரு தசாப்த இடைவெளியினபின் கமநல சேவை குழுத் தெரிவுத் தேர்தல்கள் நடைபெற உள்ளன. இவ்வளவு காலமும் சேவையாற்றி வந்த அங்கத்தவர்களை புதுப்பிக்கும் முகமாக இத்தேர்தல்கள் நடைபெற உள்ளதாக கமநல சேவைகள் திணைக்கள யாழ் மாவட்ட மத்திய ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெற்று வந்த இந்த தேர்தல்கள் நாட்டின் அமைதி அற்ற சூழ்நிலை காரணமாக ஒரு தசாப்தமாக கமநல சேவைகள் அங்கத்தவர்களிடையே எதுவித மாற்றமும் இன்றி இருந்துவந்தது.

தற்போதைய சூழ்நிலை மாற்றநிலையை பயன்படுத்தி இவ் அங்கத்தவர்களிடையே ஒரு புதிய மாற்றத்தை கொண்டுவர உள்ளதாக ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன் இத்தேர்தல்களை வரைமுறைகளுக்கேற்ற வகையில் நடத்துவதற்காக கமத்தொழில் அங்கத்தவர்கள், வாக்காளர் இடாப்புக்கள் மிக அவதானமாக தயாரிக்கப்பட்டு வருகிறது என்றும் இக் கமநல அங்கத்தவர்கள் தேர்தல் திகதிபற்றிய அறிவிப்பை பொதுமக்களுக்கும் கமத்தொழில் அங்கத்தவர்களுக்கும் தகுந்த வேளையில் பத்திரிகைகள் மூலம் அறிவிப்பதாகவும் யாழ் மாவட்ட கமத்தொழில் ஆணையாளர் தெரிவித்தார்,

# மாஸ்கோ வானொலி நிகழ்ச்சி; இன்று கொழும்பில் கருத்தரங்கு

(கொழும்பு)

மாஸ்கோ வானொலி நிகழ்ச்சியொன்று தொடர்பான கருத்தரங்கு இன்று கொழும்பில நடைபெறுகிறது.

இதில் கலந்து கொள்ள மாஸ்கோவில்இருந்து விஷேச தூதுக்குழு ஒன்று தற்போது இலங்கை வந்துள்ளது.

இத்தூதுக்குழுவினர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிகாரிகளுடனும் தகவல் ராஜாங்க அமைச்சருடனும் பேச்சு வார்த்தைகளை மேற்கொள்வர்.

ஆசியாப் பகுதியில் இந்தியா,பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம்,இலங்கை ஆகிய நாடுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மாஸ்கோ வானொலி நேயர்களாக உள்ளனர்.

## பொது நூலகம் விரைவில் திறக்கப்படும்

(பருத்தித்துறை)

கரவெட்டி பிரதேசசபை கட்டைவேலி உப அலுவலகப் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் பொதுசன நூல் நிலையத்தை வெகு விரைவில் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால தெரிவித்துள்ளார். (25)

# நெடுந்தீவு துறைமுக அருகில் புதிய வெளிச்ச வீடு அமையும்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பாவலித்துறை முகத்தின் அருகில் புதிய வெளிச்ச வீடு அமைக்கும் வேலைகள் தொடங்கப் பட்டுள்ளன.

இது 45 அடி உயர முடையதாக இருக்கும் இந்த வெளிச்ச வீடு நெடுந்தீவு அபிவிருத்திச் சபையின் நிதியுதவியுடன்மேற் கொள்ளப் பட்டுள்ளது.

நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்றுச் செய்து வருகின்றன.

முன்னர் அவ்விடத்தில் அமைக்கப் பட்டிருந்த வெளிச்ச வீடு மிகவும் சிறியதாகும் புதிய வெளிச்ச வீடு மிக விரைவிற் கட்டி முடிக்கப் பட்டால் மீனவர்களுக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என இப் பகுதி கடற் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# காத்தான்குடியில் றம்ழான் ஏற்பாடுகள் தீவிரம்

(காத்தான்குடி)

எப்போதும் இல்லாதவாறு நாட்டின் பல பாகங்களிலிருந்தும், நோன்புப் பெருநாள் வியாபாரத்துக்காக அங்காடி வியாபாரிகள் பெருமளவில் காத்தான்குடியில் வந்து குவிந்துள்ளார்கள்.

காத்தான்குடி ஜெயில் மௌலானா பள்ளிவாசல் தலைவரும், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதேச பொதுசன உத்தியோகத்தருமான ஏ.கே.குத்தூஸ் அங்காடி வியாபாரத்துக்கான வியாபார ஒதுக்கிட வசதிகளை கவனித்து வருகிறார். இதேவேளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு பூரண ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதேவேளை தகாத் பெறும் நோக்கத்துடன் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் பெரும் தொகையான ஏழைகளும் காத்தான்குடி வந்து சேர்ந்துள்ளார்கள். இவர்களின் உள்ளூர் நடவடிக்கைகள், தங்குமிட வசதிகள் ஆகியவற்றைக் காத்தான்குடிப் பிரதேச உதவி ஆணையாளர் கண்காணித்து வருகிறார்.

## பனையில்இருந்து வீழ்ந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

பனைமரத்தில் கள் இறக்க ஏறியவர் தவறி விழுந்து மரணமடைந்துளளார். க. ஞானசீலன், (வயது 29) என்பவரே இவ்வாறு மரணமானவர்.

இவர் கள் இறக்கிக்கொண்டிருந்தபோது தவறி வீழ்ந்து விட்டார். எவரும் கவனிக்காத நிலையில் பல மணி நேரம் கிடந்தமையால் மரணமானதாக மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார் (லோ)

## தமிழ்த்தின போட்டி

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி யாழ் மாவட்டத் தமிழ்த்தினப் போட்டியில்,'பல்லியம்' நிகழ்ச்சியில் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

பல கீழைத்தேச வாத்தியங்களைக் கொண்டு கர்நாடக இசையில் இசைக்கப் படும் மாணவ,மாணவிகளைக் கொண்ட குழு நிகழ்ச்சியினைக் கல்லூரியின் இசை ஆசிரியர் திருமதி குமாரசுந்தரம் நெறிப்படுத்தியிருந்தார்.

முற்று முழுதாக தமிழ்க் கலாசாரத்தை தழுவிய இந் நிகழ்ச்சி அகில இலங்கைப் போட்டியில் கலந்து கொள்ளத் தெரிவு செய்யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (41)

# சீன-இலங்கை தொலைக்காட்சி வானொலி பரிவர்த்தனைதிட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்குமிடையில் வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை பரிவர்த்தனை செய்துகொள்ளும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

சீனா வானொலி திரைப்படத் தொலைக்காட்சி அமைச்சின் துணையமைச்சர் மா. இன்சுவான் தலைமையிலான தூதுக்குழுவினர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அதிபர்களுடன் இது தொடர்பான கருத்துப்பரிவர்த்தனை ஒன்றில் ஈடுபட்டனர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவரும், பணிப்பாளர்நாயகமுமான கஷ்ஷன் சமரசிங்கா, சீனத் தூதுக் குழுவினரை வரவேற்று, வானொலியில் ஒலிபரப்பாகும் பல்வேறு நிகழ்ச்சிகள் பற்றி விளக்கி கூறினார்.

கூட்டுத்தாபனம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் உட்பட ஒன்பது மொழிகளில்தற்பொழுது நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது.

சீன வானொலி நிகழ்ச்சிகளுக்கான நேரத்தை நீடிப்பதற்கு கூட்டுத்தாபனத் தலைவர் இணக்கம் தெரிவித்தார்.

சிங்கள நிகழ்ச்சிகளைத்தயாரித்து ஒலிபரப்ப பீங்கின் வானொலிக்கு ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உதவமுடியும் என்று அவர் சீனத் தூதுக்குழுவுக்குத் தெரிவித்தார்.

இருமோட்டர்கள் பழுதாகி திருத்தப்படவில்லை
# வேலணைஅரச ஆஸ்பத்திரியில் குடிநீரின்றி நோயாளர் அவதி

வேலணையில்உள்ள கிராமிய ஆஸ்பத்திரியின்நான்கு பக்க வேலிகளும் சீரழிந்த நிலையில் திறந்த வெளியாக காட்சி தருகின்றது.

இந்த திறந்த பாதையினூடாக கட்டாக்காலி ஆடு,மாடுகளும் நாய்களும் சுதந்திரமாக ஆஸ்பத்திரியைசுற்றிவலம்வருவதோடு ஆஸ்பத்திரி வார்டுகளையும் அசிங்கப்படுத்தி வருகின்றன.

மேலும் இந்ததிறந்த பாதையினூடாக மக்கள் தாராளமாக தமது விருப்பப்படி செல்கின்றார்கள். உடனடியாக சுற்றுமதிலோ அன்றிபாதுகாப்பான வேலியோ அமைக்கப் படவேண்டுமெனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# பனம்பொருள் தொழில்துறை அபிவிருத்திக்கு நடவடிக்கை

**- ரஞ்சன்**

(கொழும்பு)

"வடக்கு கிழக்குப் பகுதிகளில் பனம்பொருள் தொழிற்துறையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடு நடுத்திட்ட விஸ்தரிப்பு வேலைகளுக்கும் அதிக கவனம் செலுத்தப்படவேண்டுமென்று பெருந்தோட்டத் தொழிற்துறைஅமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான ரஞ்சன்விஜயரட்ணா தெரிவித்துள்ளார்.

சிறியளவில் பனம்பொருள் உற்பத்தி செய்வோருக்குச் சிறந்த விலைகளை அளிப்பது விஸ்தரிக்கப்பட வேண்டும்

பனம் பொருள் அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள், ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவுத் திட்டங்களின் ஆலோசகர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் அமைச்சர் உரையாற்றினார்

வட பகுதியில் காணப்படும் தரிசு நிலங்களில் பனங் கன்றுகள் நடப்பட வேண்டுமென்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்

பனம் கன்றுகள் இலாபமோ நட்டமோ ஏற்படாத வகையில் விநியோகிக்கப்பட வேண்டும், ஆராய்ச்சி வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் கள்ளு இறக்குவோருக்கென பயிற்சித்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

விஸ்தரிப்பு உத்தியோகத்தர்கள் பனம் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளின் பெயர்களைக் கவனிக்க வேண்டுமென்றும் அமைச்சர் கூறினார்

ஐம்பதாயிரம் உறுப்பினர்களைக்கொண்ட 'முப்பத்தாறு பனம் பொருள் கூட்டுறவுச்சங்கங்கள் இயங்கி வருகின்றன சுமார் அறுபத்தையாயிரம் குடும்பங்கள் நேரடியாக அல்லது மறைமுகமாக இந்தத் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ளன

# மட்டக்களப்பில் மேதினம் வி. பு. ம. முன்னணி ஏற்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் மேதினவிழா தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அரச, தனியார் நிறுவன ஊழியர்கள், பொதுமக்கள் கலந்து கொள்ளும் ஊர்வலமொன்று பெற்றோலியம் கூட்டுத்தாபனம் சந்தியிலிருந்து புறப்பட்டு கல்முனை வீதி, லேடிமனிங்றைவ், கோட்டைமுனைப்பாலம், முனை வீதி, வைத்தியசாலை வீதி, மத்தியவீதி வழியாக காந்தி சதுக்கம் வந்து சேரும்.

ஊர்வலத்தில் தொழிலாளர் வர்க்கம், இந்தியப்படையின் அட்டூழியங்கள் ஆகியவற்றை சித்தரிக்கும் அலங்கார ஊர்திகளின் பவனி' கரகம், கோலாட்டம், கும்மி, காவடி, புலியாட்டம் என்பன இடம் பெறும்.

வாவியில் மீனவர்களின் படகு அலங்கார பவனியும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காந்தி சதுக்க மைதானத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதி தலைவர் எஸ். கரிகாலன் தலைமையில் மேதின கூட்டம் நடைபெறும். இதில் தொழிற் சங்க பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள். (37)

## பாசிக்குடாவிற்கு உல்லாசப் பயணிகள் அதிகரிப்பு

(வந்தாறுமூலை)

நீண்டகால இடைவெளிக்குபின் பாசிக்குடாவுக்கு உள்ளூர் வெளியூர் உல்லாசப் பயணிகளின் தொகை அதிகரித்து காணப்படுகிறது.

கடந்த காலத்தில் இந்தியப் படையாலும், தேச விரோத கும்பலினாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டதனால் பாசிக்குடா கடலை எவரும் நினைத்துப் பார்ப்பதில்லை. தற்போது சீரான காலநிலை காணப்படுவதால் உல்லாசப்பயணிகளின் தொகைஅதிகரித்து உள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

# பொது மக்களின் பார்வைக்கு கல்விச் சுற்றறிக்கைகள்

(காங்கேசன்துறை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்துக் குட்பட்ட பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும், பயன் பெறும் விதத்தில் மத்திய கல்வி அமைச்சு. மாகாணக் கல்வி அமைச்சு. மாவட்ட கல்வித் திணைக்களம் ஏனைய கல்வி அமைப்புக்கள் என்பன வற்றின் சுற்று நிருபங்களும், வழிகாட்டிகளும் வைக்கப் பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு வினா வங்கியில் இவைகள் உடனுதவும்' நூலகப் பணியில் பார்வையிட ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

இதன் மூலம் அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறைச் சுற்று நிருபனங்களை இலகுவில் அறிந்து கொள்ள முடியும் என உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.இ. சிவானந்தன் தெரிவித்தார். (41)

# மந்திகையில் இரவு நேரம் பெண்ணின் சங்கிலி திருட்டு

(பருத்தித்துறை)

இரவு வேளை வீட்டிலிருந்த பெண் ஒருவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை இனம் தெரியாத நபர் அறுத்துக் கொண்டு ஓடிய சம்பவம் புலோலியில் இடம் பெற்றது.

புலோலி மந்திகையிலுள்ள கிளிநொச்சி கால் நடை வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி பு. தங்கராஜா என்பவரின் சங்கிலியே இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளது.

சம்பவதினம் இவர் இரவு 10 மணியளவில் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு பூனைக்குச் சாப்பாடு வைப்பதற்காக குசினிக்கு வெளியே சென்ற போது அங்கு நின்ற திருடன் ஒருவன் இவர் அணிந்திருந்த சுமார் 2 1/2 பவுண் நிறை உள்ள தங்கச் சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடி மறைந்து விட்டான்.

வீட்டுக்காரரின் கூக்குரலையடுத்து அயலவர்கள் அங்கு கூடினார்களாயினும் திருடனைப் பிடிக்க முடியவில்லை. இத்துணிகரக் கொள்ளை சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகளிடம் புகார் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

# பஸ்சேவை ஒழுங்கில்லை

(வந்தாறு மூலை)

மட்டக்களப்பு வாழைச்சேனை போக்குவரத்து மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது. காலை ஆறு மணிக்கு பஸ் தரிப்பு நிலையத்தில் பிரயாணத்துக்கு வந்து நின்றால் பகல் பன்னிரண்டு மணிக்கே வாகனம் கிடைக்கின்றது.

எந்த ஒரு அவசர அலுவல்களுக்கும் உடனடியாகப் பிரயாணம் செய்ய முடியாமல் இப் பகுதி மக்கள் பெரும் சிரமப் படுகின்றனர். (29)

# பல்கலைக்கழகஅனுமதிக்கு பிரதேசக் கல்லூரிகள்

**-அமைச்சர் ஹமீத் தகவல்**

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சு பல்கலைக் கழக அனுமதி தராதரம் பெற்ற அனைவருக்கும் அனுமதி வழங்கவும் பிரதேசக் கல்லூரிகளைத் திறக்கவும் ஏற்பாடுகளைச் செய்கின்றது.

இவ் ஏற்பாட்டின் கீழ் 1987/88, 1988/89 மாணவர்களை மே மாதத்தில் அனுமதிக்க இருப்பதாகவும் மொத்தம் 12,000 மாணவர்கள் அனுமதி பெறுவார்கள் என்றும் அமைச்சர் ஏ. ஸி. எஸ் ஹமீத் தெரிவித்தார்.

ஒக்டோபரில் 1989/90 ஆம் ஆண்டு மாணவர்களை அனுமதிக்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதேசக் கல்லூரிகளை அமைப்பதற்கான குழுக்களை அமைத்திருப்பதாகவும் அக் குழுவினர் பாடங்கள், ஆசிரியர்கள், கட்டிடங்கள் போன்றவை பற்றி முடிவு செய்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இவ்வாறு பிரதேசக் கல்லூரிகள் அமையும் அதே வேளையில் பல்கலைக் கழகங்களின் தரம் பாதிக்கப்படமாட்டாது என்றும் இலங்கையின் பட்டம் உலகெங்கும் அங்கீகரிக்கப்படும் என்றும் அமைச்சர் ஹமீத் கூறினார்.

## வெயில் கொடுமை கால்நடைகள் இறப்பு

(கரவெட்டி)

தற்போதைய வெயில் காரணமாக வயல் வெளிகளிலுள்ள குளங்களும், கிணறுகளும் வற்றியுள்ளன. இதனால் இப்பகுதிகளுக்கு மேய்ச்சலுக்குச் செல்லும் கால் நடைகள் நீரின்றிநண்பகலுக்கு முன்னராகவே வீடு திரும்புகின்றன.

இதே நேரம் இவ் வெயில் கொடுமை காரணமாகபல கால் நடைகள் இப்பகுதிகளில் இறந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (18)

# பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் இவ்வாண்டு பத்துச் சிறப்புத் துறைகள்

(காங்கேசன்துறை)

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டத்துக்கு உட்பட்ட பத்துக் கொத்தணிப் பிரிவுகளுக்கும் இவ்வருடம் அமுலாக்கும் திட்டமாக பத்து சிறப்புத்துறைகள் தெரிந்து ஒப்படைக்கப்பட்டுள்ளன.

முறைசார்ந்த கல்வியுடன் இணைந்த கலைத்திட்டமாக அவை அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்குடன் பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவ்வத் துறைகளுக்குப் பொறுப்பாகக் கல்வி அதிகாரிகளையும் நியமித்துள்ளார்.

காங்கேசன்துறைக் கல்விக் கொத்தணிக்கு "கலை கலாசார வளர்ச்சியையும், விழுமியங்களையும் ஆசிரியர் மாணவர் மத்தியில் ஏற்படுத்தி விரிவாக்குதல்" அமுலாக்க திட்டமும் தெல்லிப்பழைக் கொத்தணிக்கு 'ஆரம்பக் கல்வி மீளாய்வு'த் திட்டம், அம்பனைக் கொத்தணிக்கு 'பொம்மலாட்டத்தை ஆரம்பக் கல்வியில் ஈடுபடுத்துதல்' திட்டம், மல்லாகம் கொத்தணிக்கு 'மாணவர்களின் சமயநெறி வளர்ச்சி'த் திட்டம், அளவெட்டி கொத்தணிக்கு 'மாணவர் நடத்தைச் சீராக்கம்' திட்டம் பண்டத்தரிப்புக் கொத்தணிக்கு 'இடைநிலை வகுப்புக்களில் தமிழ் மொழி கற்பித்தல் விரிவாக்கல்' திட்டம், இளவாலைக் கொத்தணிக்கு 'தெரிந்தெடுத்த விளையாட்டுத் துறைகளை வளர்த்தலும், விரிவுபடுத்துதல்' திட்டம், வட்டுக்கோட்டைக் கொத்தணிக்கு 'இடைநிலைக் கல்வியில் விஞ்ஞானக் கல்வி விருத்தி' பற்றிய திட்டம், சுழிபுரம் கொத்தணிக்கு, 'வாழ்க்கைத் திறன் கல்வியையும், தொழில்நுட்பக் கல்வியையும் விரிவுபடுத்தி அமுலாக்கல்' திட்டம், காரைநகர்க் கொத்தணிக்கு 'பாலர் கல்வியில் பொருத்தப்பாடு காண்டல்' திட்டம் என்பனவே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை அமுல்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு கொத்தணியிலும் ... யும் செய்து வருகின்றார்.

ஒதுக்கப்பட்டுள்ள இத்திட்டங்கள் ஒவ்வொரு வருடமும் ஏனைய கல்விக் கொத்தணிகளுக்கும் விரிவுபடுத்தி அமுலாக்கப்படுமெனவும், கல்விக்கான கலைத்திட்டமிடலில் இணைக்கலைத் திட்டமான இவை கல்வி வளர்ச்சிக்கு இன்றியமையாதவை எனவும் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார். (41)

## பொதிகை நூல் வெளியீடு

(வந்தாறுமூலை)

## திருகோணமலையில் கொள்ளை

(திருக்கோணமலை)

தம்பலகாமத்துக்கும்- பழம் பட்டாறுக்கும் இடையில் சுமார் முன்னூறு மூடைகள் மா ஏற்றி வந்த லொறி ஆயுதபாணிகளால் மறிக்கப்பட்டு மா மூடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இதே போல ரயில் மூலம் சென்ற மா மூடைகளும் ஆயுதம் தாங்கிய வர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

# நெடுந்தீவு நூலகத்துக்கு விரைவில் மின்சார வசதி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பொதுசன நூலகம், நெடுந்தீவு அபிவிருத்திச் சபை அலுவலகம் ஆகியவற்றுக்கு மிக விரைவில் மின்சார வசதியினை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுவரும் மின்சார விநியோக நிலையத்திலிருந்தே இவற்றுக்கான மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஜெனரேற்றர் மூலமே மின்சார வசதியை வைத்தியசாலை பெறுகின்றது.

## பிரயாணிகள் அவதி

## இரு மோட்டர்களும் பழுதான நிலை

(தீவுப்பகுதி)

வேலணை அரசினர்கிராமிய வைத்தியசாலையின் பாவனையில்உள்ள இரண்டு நீரிறைக்கும் மோட்டர்களும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

இவ்விரு மோட்டர்களிலொன்று ஒருவருடத்திற்கு மேலாகவும் மற்றையயந்திரம் ஐந்துமாத காலத்திற்கு மேலாகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது, இதன்பழுதுகாரணமாக இந்த ஆஸ்பத்திரியின் வாட்டுகளுக்கு நீர் வழங்க முடியாதிருக்கின்றது.

மேலும்இந்தஆஸ்பத்திரிக்கு பொருத்தப்பட்டுள்ளநீர்வழங்கும் குழாய்களும் சேதமுற்றிருப்பதால் தினமும் கழுவிதுப்புரவு செய்ய வேண்டியவேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தேவையாகிய நீர் வழங்கல் விடயத்தில் சுகாதாரதிணைக்களம் அசமந்த நிலையில்இருப்பதாக நோயாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.(15)

0

இவ் ஏற்பாட்டின் கீழ் 1987/88, 1988/89 மாணவர்களை மே மாதத்தில் அனுமதிக்க இருப்பதாகவும் மொத்தம் 12,000 மாணவர்கள் அனுமதி பெறுவார்கள் என்றும் அமைச்சர் ஏ. ஸி. எஸ் ஹமீத் தெரிவித்தார்.

ஒக்டோபரில் 1989/90 ஆம் ஆண்டு மாணவர்களை அனுமதிக்க இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பிரதேசக் கல்லூரிகளை அமைப்பதற்கான குழுக்களை அமைத்திருப்பதாகவும் அக்குழுவினர் பாடங்கள், ஆசிரியர்கள், கட்டிடங்கள் போன்றவை பற்றி முடிவு செய்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வெயில் கொடுமை கால்நடைகள் இறப்பு

(கரவெட்டி)

தற்போதைய வெயில் காரணமாக வயல் வெளிகளிலுள்ள குளங்களும், கிணறுகளும் வற்றியுள்ளன. இதனால் இப்பகுதிகளுக்கு மேய்ச்சலுக்குச் செல்லும் கால் நடைகள் நீரின்றிநண்பகலுக்கு முன்னராகவே வீடு திரும்புகின்றன.

இதே நேரம் இவ் வெயில் கொடுமை காரணமாகபல கால் நடைகள் இப்பகுதிகளில் இறந்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது. (18)

இணைந்த கலைத்திட்டமாக அவை அமுல்படுத்தப்பட வேண்டுமென்ற நோக்குடன் பண்டத்தரிப்புக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் அவ்வத் துறைகளுக்குப் பொறுப்பாகக் கல்வி அதிகாரிகளையும் நியமித்துள்ளார்.

காங்கேசன்துறைக் கல்விக் கொத்தணிக்கு ''கலை கலாசார வளர்ச்சியையும், விழுமியங்களையும் ஆசிரியர் மாணவர் மத்தியில் ஏற்படுத்தி விரிவாக்குதல்'' அமுலாக்க திட்டமும் தெல்லிப்பழைக் கொத்தணிக்கு 'ஆரம்பக் கல்வி மீளாய்வு'த் திட்டம், அம்பனைக் கொத்துக் கொத்தணிக்கு 'இடைநிலை வகுப்புக்களில் தமிழ் மொழி கற்பித்தல் விரிவாக்கல்' திட்டம், இளவாலைக் கொத்தணிக்கு 'தெரிந்தெடுத்த விளையாட்டுத் துறைகளை வளர்த்தலும், விரிவுபடுத்துதல்' திட்டம், வட்டுக்கோட்டைக் கொத்தணிக்கு 'இடைநிலைக் கல்வியில் விஞ்ஞானக் கல்வி விருத்தி' பற்றிய திட்டம், சுழிபுரம் கொத்தணிக்கு, 'வாழ்க்கைத் திறன் கல்வியையும், தொழில்நுட்பக் கல்வியையும் விரிவுபடுத்தி அமுலாக்கல்' திட்டம், காரைநகர்க் கொத்தணிக்கு 'பாலர் கல்வியில் பொருத்தப்பாடு காண்டல்' திட்டம் என்பனவே இவ்வாறு ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை அமுல்படுத்தும் நோக்குடன் ஒவ்வொரு கொத்தணிகளிடமும், இதற்கான முன் திட்டத்தையும் இதன் அமுலாக்கத்துக்கென இதுவரை செய்து முடிக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றியும் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கொத்தணி அதிபர்களிடம் விபரங்கள் கேட்டுள்ளதுடன், தொடர்பதிகாரிகளான கல்வி அதிகாரிகள் மூலமாக மேற்பார்வை இன்றியமையாதவை எனவும் திரு. இ. சிவானந்தன் தெரிவித்தார். (41)

## பொதிகை நூல் வெளியீடு

(வந்தாறுமூலை)

அன்னை பூபதியின் ஞாபகார்த்த தினத்தை முன்னிட்டு முறக்கொட்டாஞ்சேனை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 'பொதிகை' இதழ் வெளியீட்டு விழா நடைபெற்றது.

இவ் வெளியீட்டு விழாவுக்கு மட்டக்களப்பு மாவட்ட விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு.விசு தலைமைதாங்கி வெளியிட்டு வைத்தார்.

அத்துடன் அன்னை பூபதியின் நினைவாக நூற்றி ஐம்பது மரக்கன்றுகளை பொது இடங்களில் நட வைப்பதற்கான திட்டம் ஒன்றையும் ஆரம்பித்து வைத்தார்.

பல ஆயிரக் கணக்கான மக்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். இறுதியாக இதழ் ஆசிரியர் செல்வி சசிகலா நன்றி உரை வழங்கினார். (29)

சென்ற மா மூடைகளும் ஆயுதம் தாங்கியவர்களால் கொள்ளையடிக்கப்பட்டது.

மேலாகவும் மற்றையயந்திரம் ஐந்துமாதகாலத்திற்கு மேலாகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது, இதன்பழுதுகாரணமாக இந்த ஆஸ்பத்திரியின் வாட்டுகளுக்கு நீர் வழங்க முடியாதிருக்கின்றது.

மேலும்இந்தஆஸ்பத்திரிக்கு பொருத்தப்பட்டுள்ளநீர்வழங்கும் குழாய்களும் சேதமுற்றிருப்பதால் தினமும் கழுவிதுப்புரவு செய்ய வேண்டியவேலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

தேவையாகிய நீர் வழங்கல் விடயத்தில் சுகாதாரதிணைக்களம் அசமந்த நிலையில்இருப்பதாக நோயாளிகள் கவலை தெரிவிக்கின்றனர்.(15)

## நெடுந்தீவு நூலகத்துக்கு விரைவில் மின்சார வசதி

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பொதுசன நூலகம், நெடுந்தீவு அபிவிருத்திச் சபை அலுவலகம் ஆகியவற்றுக்கு மிக விரைவில் மின்சார வசதியினை வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன.

நெடுந்தீவு வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுவரும் மின்சார விநியோக நிலையத்திலிருந்தே இவற்றுக்கான மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ஜெனரேற்றர் மூலமே மின்சார வசதியை வைத்தியசாலை பெறுகின்றது.

## பிரயாணிகள் அவதி

(சம்மாந்துறை)

கல்முனை அம்பாறை வீதியில் பயணஞ் செய்யும், ஊழியர்களும், பிரயாணிகளும் குறிப்பிட்ட நேரத்தில் போக்குவரத்துச் சபையின் பேரூந்து வண்டிகள் வராததையிட்டும். மற்றும் பேரூந்து வண்டிகளின் பற்றாக் குறையினாலும் பிராணத்திற்காகப் பெரிதும் அவதியுறுகின்றனர். (57)


ஸம்ஸ் மெற்றல்ஸ்ரோர்ஸ்

யாழ். நகரில் மோட்டார் சைக்கிள்களுக்கு
தன்னிகரில்லா தலைசிறந்த ஸ்தாபனம்
உறுதியான நீடித்த பாவனைக்கு
HONDA, YAMAHA, SUSUKI,
CF 50, சாலி, MD 90, C 90, CD 90, CY 50,
Z மொடல் 50, CB 50 இன்னும் பல
மொடல்களுக்கும் இன்றே விஜயம் செய்யுங்கள்.

ஸம்ஸ் மெற்றல் ஸ்ரோர்ஸ்
297, கே. கே. எஸ். றோட்
யாழ்ப்பாணம்.

(B/839)



உங்கள் அனைவருக்கும் எமது ஈதுல் - பிதர் றம்ழான் வாழ்த்துக்கள்!

யாழ்நகரில் பொன்விழா கொண்டாடிய
ஒரே ஸ்தாபனம்

ஹாஜி வி. எம். எம். அபுசாலி அன் சன்ஸ்
57, (புதிய இல. 76), கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

ஓடர் நகைகள் விசேஷ கவனம் எடுத்து
22 கரட்டில் செய்து கொடுப்போம்.
பழைய நகைகள் மிகக் கூடிய விலையில்
வாங்குபவர்கள்.
பழைய நகைகளையும் நீங்கள் எம்மிடம்
நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
புதிய நகைகளும் உடன் கிடைக்கும்.
அபுசாலி அன் சன்ஸ்

(B/ 837)



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
எமது றம்ழான் வாழ்த்துக்கள்!

அழகிய பவுண் நகைகள்
தங்கப்பவுண் வைரங்கள்

கே. என். எம். மீருன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை.
நகை வைர வியாபாரம்.

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 22585

(B/835



உங்கள் அனைவருக்கும் எமது ஈதுல் - பிதர் றம்ழான்
வாழ்த்துக்கள்!

வெளிநாட்டில் உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
கடிதங்கள் பார்சல்கள் தஸ்தாவேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்புகொள்ளுங்கள்

D.H.L. INTERNATIONAL LTD.
C/o, COSMOS MARKETING SERVICES Ltd
337, Kasthuriyar Road,
Jaffna.

(B-836)



புதிய உயர் கல்லூரி ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L - 90 வினா - விடை
புவியியல் — குணராசா

ஆரம்பம்: 28-04-1990 — 2-00 மணி

(B.820)



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்

எமது
றம்ஸான் வாழ்த்துக்கள்

கிளாஸ் ஹவுஸ்
182, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்

(B-838)

சிந்தனைக்கு

எதையும் உண்மைக்காக இழக்கலாம் - ஆனால்
எதற்காகவும் உண்மையை இழக்கக்கூடாது
- மகாத்மாகாந்தி

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 27 - 04 - 90

தொலைபேசி
ஆசிரிய பீடம்: 025-2839 நிர்வாக பீடம்: 2208

# தமிழக மீனவர் அத்துமீறல்

தமிழக மீனவர்கள் பெருந்தொகையினராக தமிழீழ கரையோரப் பிரதேசங்களில் ஊடுருவல் செய்து அடாவடித்தனமாக நடந்து கொள்வதை நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி தமிழக முதலமைச்சர் கலைஞர் கருணாநிதிக்கு தலைவர் பிரபாகரன் அவசரமாக வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

இப்பிரச்சினை குறித்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் கருணாநிதியும் உறுதியளித்து இருக்கிறார்.

இதேசமயம் இலங்கைப் பாராளுமன்றத்தில் இந்திய மீனவர் சம்பந்தமாக எதிர்க்கட்சியினர் புலிகளின் செயலுக்கு எதிராகக் குரல் எழுப்பியிருக்கின்றனர்.

இந்திய மீனவர் சம்பந்தமாக புலிகள் எடுத்த முடிவில் என்ன பிழையிருக்கிறது என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியினரைக் கேட்டிருக்கிறார்.

எதிர்க்கட்சியினரைப் பொறுத்தவரை எந்தப் பிரச்சினையை அரசுக்கெதிராகத் தூண்டிவிடலாமென்பதே அவர்கள் கவலை!

அமைதிப்படை என்ற இந்திய இராணுவம் இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறிய ஒரு மாத காலத்துக்குள் வடமராட்சி மற்றும் மன்னார் கடற் பிரதேசத்துக்குள் தமிழக மீனவர்கள் பெருந்தொகையாக மூன்று தடவைகள் அத்துமீறிப் பிரவேசித்திருக்கிறார்கள்.

அத்துமீறிப் பிரவேசிப்பது மட்டுமல்ல நமது கடற்றொழிலாளர்களைத் தாக்கவும் செய்கிறார்கள்; வலைகளை அறுத்து நாசம் செய்கிறார்கள்; வலைகளைத் திருடிக்கொண்டும் சென்றுவிடுகிறார்கள்.

நமது கடற்றொழிலாளர் எத்தனை காலம்தான் இதைச் சகித்துக்கொண்டிருக்க முடியும்?

இவர்களுக்குக் கை கொடுக்கவும் அத்துமீறிவந்து அடாவடித்தனத்திலீடுபடுபவர்களைத் தட்டிக் கேட்கவும் விடுதலைப் புலிகள் முன்வந்தனர்.

இந்திய இராணுவம் வெளியேறிச் சென்றதுமே பருத்தித்துறைக் கடற்பிரதேசத்துக்குள் நுழைந்த முந்நூற்றுக்குமதிகமான தமிழக மீனவர்களைக் கைது செய்த விடுதலைப் புலிகள் அவர்களை நன்கு உபசரித்து அத்துமீறிக் கடல் எல்லையைத் தாண்டி அவர்கள் வருவதால் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக்கூறி இனியும் இப்படி அத்துமீறல் செய்ய வேண்டாமென்று புத்திமதியும் சொல்லி அனுப்பி வைத்தனர்.

தமிழக மீனவர்களைப் புலிகள் கைது செய்ததற்கு தமிழ்நாடு காங்கிரஸ்காரரும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினரும் சட்டசபையிலும் வெளியிலும் கூச்சலிட்டனர்.

அரசியல் ஆதாயந் தேடும் நோக்குடன் போட்ட கூச்சல்களுக்கு கருணாநிதி பதில் சொல்லிச் சமாளித்தார். தமிழக மீனவர்களும் எல்லையைத் தாண்டக்கூடாது என எச்சரிக்கையும் செய்திருந்தார்.

# நாயாற்றிலிருந்து-முகத்துவாரம்வரை--

## ஒரு சிறு கண்ணோட்டம்

வடமாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இடையில் அமைந்துள்ள நாயாறு கொக்குத் தொடுவாய் கொக்கிளாய் முகத்துவாரம் ஆகிய கிராமங்களில் இருந்து 84ஆம் ஆண்டு பலவந்தமாகவெளியேற்றப்பட்ட மக்கள் ஏறத்தாள ஆறு ஆண்டுகளின் பின்னர் மீண்டும் தமது பிரதேசங்களில் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டுள்ளார்கள், குடியேறி விட்டார்கள் என்று செய்திகள் வந்து விட்டன.

யதார்த்த நோக்கில் இது மீளக்குடியேற்றமாகக் கருதப்பட முடியாதது. ஏனெனில் அப்பிரதேசம் முழுமையாகக் கைவிடப்பட்டதனால் புதிய குடியேற்றமாய் கருதப்பட்டு குடியேற்ற வாசிகளுக்கு வழங்கப்படும் அனைத்து உதவிகளும் வழங்கப்பட வேண்டும். அல்லாவிடில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இப் பகுதிகளில் ஏற்கனவே உள்ள தமிழர்களில் எண்ணிக்கையைக் கூடப் பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டு விடும்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அடைக்கலம் தேடிய ஒருபகுதி மக்கள் திரும்ப வந்து குடியேறுவதில் அக்கறை காட்டவில்லை. மருத்துவவசதியீனம் போக்குவரத்து. கல்வி உழைப்பிற்கு சரியான வாய்ப்புகள் இன்மை குடியிருக்க வீடுகள் இன்மை என ஒரு பட்டியலையே நேரடியாய் அவர்களுடன் உரையாடிய பொழுதுஅறிந்து கொள்ள முடிந்தது.

மருத்துவ வசதிகளைப் பொறுத்த வரையில் இப்பிரதேசத்தில் கொக்குளாயில் கிராமிய வைத்தியசாலை ஒன்று அமைந்திருந்தது. கிராம மக்கள் வெளியேற்றப்பட்டதுடன் செயலிழந்து போய் விட்ட அவ் வைத்தியசாலை மீள செயற்படுத்தப்பட இன்று வரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை வாரத்தில் இரு நாட்கள் மட்டும் பகலில் மருந்து வழங்கப்பட நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது. நிரந்தரமாய் வைத்தியர் ஒருவர் இப்பகுதியில் நியமிக்கப்படாத விடத்து மக்கள் குடியேற விரும்ப மாட்டார்கள். வேறு வழியின்றிக் குடியேறினாலும் மருத்துவ சேவை கிடைப்பது அரிதே.

தொடர்ந்து நியாய விலையில் தமது பாவனைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள எவ்வித வசதிகளும் கிடையாது என இப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டினார்கள். 84இற்கு முன் இப்பகுதியில் செயற்பட்டு வந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை மீண்டும் இப்பகுதியில் நிறுவப்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும்.

தற்போதுள்ள போக்குவரத்து சேவைகள் மிகக் குறைவானதே. இவ் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். இலாப நோக்கமின்றிசேவை நோக்கில் நடைபெற வேண்டும்.

பொருளாதார அடிப்படையில் பார்க்கும் பொழுது முகத்துவாரம் பகுதியில் றால் இக்காலத்தில் தாராளமாய் கிடைக்கின்றது. பெரும்பான்மை சமூகத்தினர் இப் பகுதியில் குடியேறி மீன்பிடிப்பின் மூலம் இலாபமீட்டுகின்றனர். வலைகளையோ ஏனைய சாதனங்களையோ தமக்குப் பெற்றுத் தந்தால் தாமும் தமது மண்ணில் தொழிலில் ஈடுபடலாம். தமது செல்வத்தை வேறு பகுதிகளில் இருந்து வந்து குடியேறிய பெரும்பான்மை சமூகத்தினர் பெற்றுக் கொள்ளும் பொழுது தாம் உழைப்பின்றி தமது பச்சிளம் குழந்தைகட்கு பால் இன்றி வாட வேண்டியுள்ளதே என இப் பகுதி முதியவர் ஒருவர் ஆதங்கப்பட்டார்.

அடுத்து கொக்கிளாய் இராணுவ முகாமில் இருந்து வெளிவரும் சிங்கள இராணுவத்தினர் எம் மக்கள் இப் பகுதியில் இருந்து கலைக்கப்பட்ட பொழுது விட்டுச் சென்ற மாடுகளை வேட்டையாடி எடுத்துச் செல்கிறார்கள் என மக்கள் முறையிட்டார்கள். பால் பெறக்கூடிய பசுக்கள் கூட அழிக்கப்படுகின்றன.

இப்பகுதியில் கொக்கிளாய் பாடசாலையில் ஒரு முகாமும் முகத்துவாரம் பகுதியில் இன்னொன்றுமாய் இரண்டு சிங்கள முகாம்கள் காணப்படுகின்றன. முகத்துவாரத்தில் உள்ள பெரும்பான்மையினருக்கு மின்சார வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

கொக்கிளாய் பாடசாலை முகாம் அகற்றப்பட்டு கட்டடங்கள்மீளபாடசாலைநடத்த வழங்கப்பட வேண்டும் என மக்கள்எடுத்துக் கூறினார்கள். வடபிராந்தியத்தில் செயற்படும் புனர்வாழ்வு துயர் துடைப்பு அமைப்புகளிடமிருந்து காத்திரமான உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. என்பதை இம்மக்கள் சுட்டிக் காட்டினார்கள். யாழ். நகரில் உள்ள ஒரு பிரபல புனர்வாழ்வு நிறுவனத்தில் சகல புனர்வாழ்வு கொடுப்பனவுகளும் இடை நிறுத்தப்பட்டுள்ளன'' என விளம்பரம் செய்யப்பட்டுள்ளதென இப்பகுதி மக்கள் குறைப்பட்டுக் கொண்டனர்.

முடிவாக கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இப் பகுதியில் மீளக் குடியேற்றம் வெற்றிகரமாய் மேற் கொள்ளப்பட வேண்டும். மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய தேவைகளும், உழைப்பிற்கான வாய்ப்புகளும்ஏற்படுத்தப்பட வேண்டும். இது தமிழீழத்தின் நலனில் அக்கறை கொண்ட ஒவ்வொரு தனிமனிதனினதும் ஸ்தாபனங்களினதும் தவிர்க்க அல்லது தப்பிக் கொள்ள முடியாத வரலாற்றுக் கடமையாகும்.

– பிறேம்

# எங்கள் நெருக்கடியை கவனத்திற் கொள்வார்களா

ஆசிரியர்
ஈழநாதம்.

அதிகமான அலுவலகங்கள் 4-30 மணியளவில் மூடப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் அலுவலக ஊழியர்கள் 4–30 மணியளவில் பருத்தித்துறையை நோக்கிச் செல்லும் 750 இலக்க இ.போ.ச பஸ்சை பிடிப்பதற்காக தமது அலுவல்களை 4-15 மணியளவில் முடித்து விட்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய் பஸ்தரிப்பு நிலையத்தில் நின்று பஸ்ஸை மறித்தால் பஸ் நிற்காமல் சென்றுவிடுகிறது. ஆனால் பஸ் ஓட்டுநருக்கு தெரிந்தவரெனில் எவ்வளவுதான் சனநெருக்கடி இருந்த போதும் பஸ்ஸை நிற்பாட்டி ஏற்றிச் செல்வார்.

மணிக்கு மேலாகி விடுகிறது. குறித்த 4-30 மணியளவில் செல்லும் 750 இலக்க பஸ் யேற்குறித்த பஸ்தரிப்பு நிலைமத்திலுள்ளவர்களை ஏற்றாமல் நீர்வேலி, கோப்பாய் அச்சுவேலி செல்பவர்களை பஸ்நிலையத்திலிருந்துஏற்றிக் கொண்டு வருவதும் பருத்தித்துறை மக்கள் புறுபுறுப்பதும் அடிக்கடி நிகழும் சம்பவம்.

மேற்குறிப்பிட்ட குறுகிய இடங்களுக்கு இதே நேரம் அச்சுவேலி இ.போ.ச பஸ் செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் அதை விடுத்து 750 இலக்க பஸ்சில் செல்வதன் காரணந் தான் என்னவோ?

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் நான் மட்டுமல்ல என்னைப் போல எத்தனையோ பெண்கள் மிக மிகப் பாதிப்படைந்திருக்கிறார்கள் என்பதை இங்கு கூறி வைக்க விரும்புகிறேன்.

## மக்கள் மடல்

# ஆழமாக்கும் வேலைகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுத் துறைமுகக் கடற்பகுதியை ஆழமாக்கும் வேலை தொடங்கியுள்ளது. பாரிய கற்பாறைகள் உடைக்கப்பட்டு, புதியவலம்புரி மோட்டார்ப்படகு உட்செல்லும் வகையில் பாதை ஆழமும், அகலமுமாக்கப்பட்டது.

இதனை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி ஆதரவாளர்களின் உதவியுடன் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டு சிரமதான மூலம் செய்து முடித்தனர்.

கடல் வற்றும் காலங்களில் படகுகள் உட்செல்வதிற் சிரமும், படகுகள் மிதப்பதில் பல சிக்கல்களும் ஏற்பட்டு வந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

# இந்து இளைஞர் சங்க வெள்ளி விழா

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் தனது வெள்ளி விழாவை இம் மாதம் 28–ம் 29-ம் 30-ம் திகதிகளில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் சிறப்பாகக் கொண்டாடவுள்ளது.

சிறப்புமலர் வெளியீடு, சால்வை வெளியீடு பட்டிமன்றம், நாட்டிய நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு, இன்னிசைமாலை நாடகம் எனப் பல்சுவை அம்சங்கள் அடங்கிய இவ்விழாவில் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி வெள்ளி விழாச் சிறப்பு மலரை வெளியிட்டுவைப்பார் தெல்லிப்பழைசுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் வெள்ளிவிழா ஞாபகார்த்த மண்டபத்தை திறந்து வைப்பார். (29

# இந்தியப் படையின் தமிழீழப் படுகொலைகளை உலகறியச் செய்தல் வேண்டும்

ஈழத்தமிழர்களின் ஒப்புதலைப் பெறாத ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தின் கீழ் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியப் படையின் பல பிரிவுகள் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கையில் வந்து இறங்கியபோது இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் முதல் தடவையாக தமிழீழ மக்கள் ஒரு நீண்ட நிம்மதிப் பெருமூச்சை விட்டனர். தங்களுடைய காவல்

படியும் இந்தப்படை தூண்டியது.

இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த திரு. ஏ.பீ. வெங்கடேஸ்வரன் இந்தியப் படை இங்கு இழைத்த கொடுமைகளை குறிப்பிடும் போது ''காலம் காலமாக மாறிமாறிப் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் அதுவரை காலமும் செய்த கொலைகள், அட்டூழியங்களை விட அதிகமான

பட்டன. இந்தியாவின் ஏனைய மாநில மக்களுக்கும் இவை இருட்டடிப்புச் செய்யப்பட்டன. உலகமே அறியாதவாறு பிறநாட்டு நிருபர்களின் வருகை தமிழீழத்தில் தடை செய்யப்பட்டதோடு, உண்மைகள் முற்றாக மறைக்கப்பட்டு முற்றிலும் பொய்யான விபரங்கள் தமிழக மக்களுக்கும் பிற இந்திய மக்களுக்கும் உலகத்திற்கும் அறிவிக்கப்பட்டன. விடுதலைப்

திருடிக்கொண்டும் சென்றுவிடுகிறார்கள்.

நமது கடற்றொழிலாளர் எத்தனை காலம்தான் இதைச் சகித்துக்கொண்டிருக்க முடியும்?

இவர்களுக்குக் கை கொடுக்கவும் அத்துமீறிவந்து அடாவடித்தனத்திலீடுபடுபவர்களைத் தட்டிக் கேட்கவும் விடுதலைப் புலிகள் முன்வந்தனர்.

இந்திய இராணுவம் வெளியேறிச் சென்றதுமே பருத்தித்துறைக் கடற்பிரதேசத்துக்குள் நுழைந்த முந்நூற்றுக்குமதிகமான தமிழக மீனவர்களைக் கைது செய்த விடுதலைப் புலிகள் அவர்களை நன்கு உபசரித்து அத்துமீறிக் கடல் எல்லையைத் தாண்டி அவர்கள் வருவதால் ஏற்படும் கஷ்டங்களை எடுத்துக்கூறி இனியும் இப்படி அத்துமீறல் செய்ய வேண்டாமென்று புத்திமதியும் சொல்லி அனுப்பி வைத்தனர்.

தமிழக மீனவர்களைப் புலிகள் கைது செய்ததற்கு தமிழ்நாடு காங்கிரஸ்காரரும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தினரும் சட்டசபையிலும் வெளியிலும் கூச்சலிட்டனர்.

அரசியல் ஆதாயம் தேடும் நோக்குடன் போட்ட கூச்சல்களுக்கு கருணாநிதி பதில் சொல்லிச் சமாளித்தார். தமிழக மீனவர்களும் எல்லையைத் தாண்டக்கூடாது என எச்சரிக்கையும் செய்திருந்தார்.

இதன்பின்னரும் தமிழக மீனவர் வடமராட்சிக் கடற்பிரதேசத்துக்குள் அத்துமீறிப் பிரவேசித்து அடாவடித்தனம் செய்கின்றனர்.

இம்முறையும் விடுதலைப் புலிகள் அவர்களைக் கரைக்குக் கொண்டு வந்து எச்சரிக்கை செய்து வழியனுப்பி வைத்தனர்.

தமிழகத்தில் காங்கிரஸ்காரரும் மற்றும் எதிர்க்கட்சியினரும் தமிழக மீனவருக்குப் பாதுகாப்பளிக்க வேண்டுமென்று குரல் கொடுத்தனர்.

இதற்கும் முதலமைச்சர் கருணாநிதி பதில் சொல்லிச் சமாளித்தார்.

மீண்டும் மூன்றாவது தடவையாகவும் மன்னார்க் கடற்பிரதேசத்தில் அவர்கள் அத்துமீறி அட்டகாசம் புரிந்திருக்கின்றனர்.

தமிழக மீனவர்கள் எச்சரித்து விடுதலை செய்யப்பட்டதுடன் தமிழக முதல்வரும் அத்துமீறி இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் செல்லவேண்டாமென்று எச்சரித்தும் அவர்கள் இங்கு வருவதென்றால் இதற்குப் பின்னணியில் ஏதோ சக்திகள் தூண்டுதலாக இருக்கவேண்டுமென்ற சந்தேகம் எழுவது இயல்பு.

இந்திய இராணுவம் அட்டூழியங்கள் புரிந்தபோதிலும் தமிழக மக்களும் தமிழக அரசும் தமிழீழ மக்களுடன் நல்லுறவும் நட்புறவும் கொண்டுள்ளனர்.

இந்த உறவைச் சீர்குலைப்பதற்கு இந்திய அரசுக்கும் இலங்கைக்கும் மோதலை ஏற்படுத்துவதற்கும் றோ என்ற உளவு ஸ்தாபனம் தொடர்ந்தும் முயற்சி செய்து வருகிறதா?

இது ஆராயப்படவேண்டிய விஷயம். தமிழ்நாடு அரசு இதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டியதும் அவசியம்.

# மரமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

(அக்கரைப்பற்று)

கிழக்கு மாகாணத்தில்உள்ள மரமுந்திரிகை கூட்டுத்தாபனமும், கமத்தொழில் சேவை திணைக்களமும்சேர்ந்து பெருமளவு மர முந்திரிகைச் செய்கையில் மக்களை ஈடுபடுத்துவதற்கான ஒரு திட்டத்தை அமுல் செய்துள்ளன.

இந்ததிட்டத்தின்கீழ்தேவையான விதைகள் கன்றுகள் அந்தந்தப் பகுதிகமத்தொழில் சேவை நிலையங்கள் மூலம் இலவசமாக வழங்கப் படுகின்றன.

அத்துடன் மர முந்திரிகை கூட்டுத தாபனத்தினால் சகல மானிய உதவிகளும் மரமுந்திரிகைச் செய்கையாளருக்கும் வழங்கப்படவுள்ளன.

ஒரு ஏக்கருக்கு மேல்மரமுந்திரிகைச் செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு கடன் உதவியும் கமத் தொழில் சேவை திணைக்களத்தினால் வழங்கப் பட இருக்கிறது.

அநேகமான அலுவலகங்கள் 4-30 மணியளவில் மூடப்படுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் அலுவலக ஊழியர்கள் 4-30 மணியளவில் பருத்தித்துறையை நோக்கிச் செல்லும் 750 இலக்க இ.போ.ச பஸ்சை பிடிப்பதற்காக தமது அலுவல்களை 4-15 மணியளவில் முடித்து விட்டு விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய் பஸ்தரிப்பு நிலையத்தில் நின்று பஸ்ஸை மறித்தால் பஸ் நிற்காமல் சென்றுவிடுகிறது. ஆனால் பஸ் ஓட்டுநருக்கு தெரிந்தவரெனில் எவ்வளவுதான் சனநெருக்கடி இருந்த போதும் பஸ்ஸை நிற்பாட்டி ஏற்றிச் செல்வார்.

## மக்கள் மடல்

அரசடி, நல்லூர், முத்திரைச்சந்தையடி பஸ் தரிப்பு நிலையங்களில் நிற்பவர்களுக்கு இது நாளாந்தம் நடைபெறுகிறது.

இதைவிட்டு அடுத்த பஸ்ஸிற்கு காத்திருந்தால் 5-45 மணியளவில் தான் பஸ் நிலையத்திலிருந்து புறப்படும். பருத்தித்துறைக்குச் செல்ல 7 ... செல்லும் 750 இலக்க பஸ்யேற்குறித்த பஸ்தரிப்பு நிலையத்திலுள்ளவர்களை ஏற்றாமல் நீர்வேலி, கோப்பாய் அச்சுவேலி செல்பவர்களை பஸ்நிலையத்திலிருந்துஏற்றிக் கொண்டு வருவதும் பருததித் துறை மக்கள் புறுபுறுப்பதும் அடிக்கடி நிகழும் சம்பவம்.

மேற்குறிப்பிட்ட குறுகிய இடங்களுக்கு இதே நேரம் அச்சுவேலி இ.போ.ச பஸ் செல்வது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர்கள் அதை விடுத்து 750 இலக்க பஸ்சில் செல்வதன் காரணந் தான் என்னவோ?

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் நான் மட்டுமல்ல என்னைப் போல எத்தனையோ பெண்கள் மிக மிகப் பாதிப்படைந்திருக்கிறார்கள் என்பதை இங்கு கூறி வைக்க விரும்புகிறேன்.

எனவே இதற்கு குறித்த பஸ் டிப்போ அதிகாரிகளும், குறுகிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளும் ஒத்துழைப்பு தருவார்களா என எதிர்பார்க்கின்றோம்.

ஆ. அருந்ததி

தென்புலோலி

# பலாலி ஆசிரியர் கலாசாலையை பழைய இடத்திற்கே மாற்றவும்

ஆசிரியர்,
'ஈழநாதம்'

பலாலி ஆசிரியர்கலாசாலை சகல வசதிகளுடனும் திறம்பட வசாவிளானில் இயங்கி வந்தது. இராணுவத்தின் அச்சுறுத்தல், பயம் காரணமாக 1986ஆம் ஆண்டு இக்கலாசாலை மூடப்பட்டுகோப்பாய் ஆசிரியர் கலாசாலையுடன் இணைக்கப்பட்டு அங்கு தற்போது இயங்கி வருகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இலங்கை இராணுவம் பலாலி ஆசிரியர் கலாசாலையைப் பொறுப்பேற்று அங்கு தொடர்ந்தும் நிலைகொண்டுள்ளது. இதனால் இக்கலாசாலை பல நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் இடமின்மையால் பலாலி ஆசிரியர் கல்லூரி இங்கு பல கஷ்டத்தின் மத்தியிலும் இயங்குகின்றது.

முன்னைய வசாவிளானில் உள்ள ஆசிரியர் கல்லூரி பல வசதிகளையும் கொண்ட திறமாக அமைக்கப்பட்ட விசாலமான கல்லூரியாகும். இங்கு முன்பு ஆங்கில பயிற்சிநெறி, உடற்கல்வி பயிற்சிநெறி, விவசாயப் பயிற்சிநெறி. கணிதப் பயிற்சிநெறி, விஞ்ஞானப் பயிற்சிநெறி போன்ற பல பயிற்சி நெறிகளில் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்தது. தற்போது கணித, விஞ்ஞான, விவசாய பயிற்சிநெறிகள் மாத்திரமே நடைபெறுகிறது.

தற்போது நாட்டில் சுமுகமான நிலை தோன்றியபடியால் வசாவிளான் ஆசிரியர் கலாசாலையில் உள்ள இராணுவத்தை அங்கிருந்து வெளியேற்றி மீண்டும் பலாலி ஆசிரியர் கலாசாலையை அங்கு இயங்கச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன். இங்குள்ள இராணுவம் பழையபடி முன்புபோல பலாலி இராணுவ முகாமுக்கு போகலாம். இதனால் இராணுவத்துக்கு எவ்வித சிரமமும் இல்லை. எனவே தற்போது இல்லாத ஆங்கிலம்,உடற்கல்விபோன்ற பயிற்சிநெறிகளையும்சேர்த்து மீண்டும் பலாலி ஆசிரியர் கலாசாலையை முன்னைய இடத்தில் இயங்க எல்லோரும் நடவடிக்கை எடுக்குமாறு மீண்டும் அன்புடன் வேண்டுகிறேன். தற்போதைய எமது பொருளாதார நிலையில் ஆசிரியர் கலாசாலைக்கு வேறுகட்டிடம் கட்டுவதோ அல்லது வேறு இடங்களுக்கு மாற்றுவதோ மிகவும் கஷ்டமான காரியமாகும். இக்கலாசாலையுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு வசாவிளானிலுள்ள ஆசிரியர் கலாசாலையை மீண்டும் இயங்கச் செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

- வி. வேலும்மயிலும்
கரவெட்டி.

...வத்தினர் எம் மக்கள் இப்பகுதியில் இருந்து கலைக்கப்பட்ட பொழுது விட்டுச் சென்ற மாடுகளை வேட்டையாடி எடுத்துச் செல்கிறார்

...அல்லது தப்பிக் கொள்ள முடியாத வரலாற்றுக் கடமையாகும்.

– பிரேம்

...நிதி இ. தெய்வேந்திரன் வெள்ளிவிழா ஞாபகார்த்த மண்டபத்தை திறந்து வைப்பார். (29

# இந்தியப் படையின் தமிழீழப் படுகொலைகளை உலகறியச் செய்தல் வேண்டும்

ஈழத்தமிழர்களின் ஒப்புதலைப் பெறாத ராஜீவ் - ஜே. ஆர். ஒப்பந்தத்தின் கீழ் 1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்தியப் படையின் பல பிரிவுகள் அமைதிப்படை என்ற பெயரில் இலங்கையில் வந்து இறங்கியபோது இந்த நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் முதல் தடவையாக தமிழீழ மக்கள் ஒரு நீண்ட நிம்மதிப் பெருமூச்சை விட்டனர். தங்களுடைய காவல் தெய்வங்கள் வந்திறங்கிவிட்டன. அவர்கள் இனிமேல் எவராலும் எங்களை எதுவும் செய்துவிட முடியாது. எங்களுடைய உயிர்களுக்கும் உடைமைகளுக்கும் நிரந்தரப் பாதுகாப்பு கிடைத்துவிட்டது, இந்தியப்படை எங்களுடைய உரிமைகளையும் நிரந்தரமாகப் பெற்றுத் தந்துவிடும் என்று நம்பி அகமகிழ்ந்தார்கள்.

இந்தியப்படை இங்கு வந்து இறங்குவதற்கு முன்னரும் இறங்கிய வேளையிலும் அதற்குப் பின்னரும் இந்தப்படை இலங்கைக்குச் சென்றது இலங்கைக்குச் சென்றது இலங்கைத்தமிழர்களின் உயிர்களையும் உடைமைகளையும் பாதுகாத்து அவர்களுடைய உரிமைகளைப் பெற்றுத் தரவே என்று அன்றைய இந்தியராஜீவ்அரசாங்கம்பொய்ப் பிரசாரம் செய்து தமிழக மக்களையும், மற்ற இந்திய மககளையும் உலகத்தினையும் நம்பவும் வைத்தது.

ஆனால் தமிழீழத்தில் குடிகொண்ட இந்தியப்படை நடந்துகொண்ட விதமோ உலக சரித்திரத்திலுள்ள காட்டுமிராண்டி ஆக்கிரமிப்பாளர்களை விட மோசமானதாகவே இருந்தது. இந்தப்படையைச் சேர்ந்தவர்கள் அமைதியை நிலை நாட்ட வந்தவர்களைப் போலல்லாது ஒரு எதிரி நாட்டைப் பிடித்தவர்களைப் போல் மிகவும் கேவலமான முறையில் நடந்து கொண்டனர். இவர்கள் செய்த படுகொலைகளும் அட்டூழியங்களும் இந்திய இராணுவத்திற்கு நிலையான அவமானத்தைத் தேடித் தந்தன. எல்லாவற்றிற்கும் மேலாக எதுவிதமான நல்ல கொள்கையோ நோக்கமோ அற்ற அறிவிலிக் கும்பல்களை அரியாசனத்தில் அமர்த்தி அவைகளுக்கு ஆயுதங்களையும் கொடுத்துத் தான் செய்த கொலைகளுக்கும் அட்டூழியங்களுக்கும் மேலாகச் செய்யும்படியும் இந்தப்படை தூண்டியது.

இந்திய வெளியுறவுச் செயலாளராக இருந்த திரு. ஏ.பீ. வெங்கடேஸ்வரன் இந்தியப் படை இங்கு இழைத்த கொடுமைகளை குறிப்பிடும் போது ''காலம் காலமாக மாறிமாறிப் பதவிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் அதுவரை காலமும் செய்த கொலைகள், அட்டூழியங்களை விட அதிகமான கொலைகளையும் அட்டூழியங்களையும் இந்தியப் படை 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் செய்துள்ளது'' என்று இரத்தினச்சுருக்கமாகக் குறிப்பிட்டார்.

உலக சரித்திரத்தில் எந்த அமைதிப் படையாவது ஈவிரக்கமின்றி மக்கள் குடியிருப்புகளை நோக்கி ஷெல்களை ஏவி ஆயுதமற்ற, போரில் ஈடுபடாத அப்பாவிப் பொது மக்களை ஆயிரக்கணக்கில் கொன்று குவித்தது கிடையாது. பதுங்கு குழிகளில் ஒளிந்து பயந்து நடுங்கிக் கொண்டிருந்த ஆண்களையும் பெண்களையும், சிறுவர்களையும் சிறுமிகளையும பச்சிளம் பாலகர்களையும் எந்த அமைதிப்படையாவது துப்பாக்கியால் சுட்டுக் குடும்பம் குடும்பமாக அழித்ததில்லை. மறுகரையை அடைய தோணிக்குக் காத்து நின்ற அகதிகளை ஹெலிகொப்ரர்களிலிருந்து சுட்டு வீழ்த்தியதில்லை. அமைதியை நிலைநாட்டுகிறோம் என்று பறைசாற்றிக் கொண்டு அப்பாவித் தமிழ்ப் பெண்களைக் கற்பழித்துவிட்டுப் பின்னர் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு நெருப்பில் போட்டுப் பொசுக்கியதில்லை. உலகசரித்திரத்தில் ஒரு அமைதிப் படை விமானக் குண்டு வீச்சுக்களாலும் ஷெல்களாலும் சாதாரணப் பொதுமக்களின் வீடுகளையும், வியாபார நிலையங்களையும், வழிபாட்டுத் தலங்களையும் தாக்கி உடைத்ததில்லை. ஒரு அமைதிப்படை செய்யவேண்டிய அத்தனை நல்ல பணிகளையும் செய்யாது ஒரு ஆக்கிரமிப்புப் படை செய்யவேண்டிய அத்தனை அட்டூழியங்களையும் இந்தியப்படை செய்தது.

இத்தகைய பெருமை வாய்ந்த இந்த அமைதிப்படை இங்கு நிகழ்த்திய திருவிளையாடல்கள் அனைத்தும் தமிழக மக்களுக்கு மூடிமறைக்கப்பட்டன. இந்தியாவின் ஏனைய மாநில மக்களுக்கும் இவை இருட்டடிப்புச் செய்யப்பட்டன. உலகமே அறியாதவாறு பிறநாட்டு நிருபர்களின் வருகை தமிழீழ்த்தில் தடை செய்யப்பட்டதோடு, உண்மைகள் முற்றாக மறைக்கப்பட்டு முற்றிலும் பொய்யான விபரங்கள் தமிழக மக்களுக்கும் பிற இந்திய மக்களுக்கும் உலகத்திற்கும் அறிவிக்கப்பட்டன. விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதையே தங்களுடைய ஒரே லட்சியமாகக் கொண்டு ஒற்றுமையுடன் ஆரம்பத்தில் செயற்பட்ட இந்திய-இலங்கை அரசாங்கங்கள் வெற்றிகரமாக விஷமத்தனமான பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டன. இன்றுகூட தமிழக மக்களில் பெரும்பாலோர் அமைதிப்படை இங்கு பிரமாதமாகக் கடமையாற்றி ஈழத் தமிழர்களைக் காப்பாற்றும் புனித கைங்கரியத்தைச் செய்துவிட்டு திரும்பியிருக்கிறதென்றே நம்பிக் கொண்டிருக்கிறார்கள். அது ஈழத் தமிழர்களின் இரத்தக் கறைகளோடும் சுடுகாட்டுச் சாம்பலோடும் திரும்பியிருக்கிறதென்பது அவர்களுக்குத் தெரியாது. இங்கு நடந்த நடப்புகள் அவர்களுக்குச் சரிவரத் தெரிந்திருப்பின் வடஇந்தியர்களால் கூட்டித் துடைத்து வெளியே தள்ளப்பட்ட இந்திரா காங்கிரஸிற்கு தமிழகத்தில் மகோன்னத தேர்தல் வெற்றியை அவர்கள் அண்மையில் ஈட்டித் தந்திருக்கமாட்டார்கள்.

ஆகவே இந்தியப்படை தமிழீழத்தில் செய்த அனைத்துக் கொலைகள்,பொருள்அழிப்பு, கட்டிட அழிப்புகள், அட்டூழியங்கள் பற்றியும் அதன் எடுபிடிகள் தங்களுடைய கடைசி நாட்களில் செய்த ஆட்கடத்தல்,பட்டாளத்திற்கும் பலாத்காரமாக இளைஞர்களை அள்ளிச் செல்லல், துப்பாக்கிச் சூட்டுக் கொலைகள், வீதியோரச் சிரச்சேதங்கள் மற்றும் அட்டூழியங்கள் பற்றியும் விரிவான புத்தகங்கள் வெளிவரவேண்டும். தமிழ், ஆங்கிலம், இந்தி ஆகிய மும்மொழிகளிலும் வெளிவர வேண்டிய இந்தப் புத்தகங்கள் தமிழீழ மக்களின் பாதிப்புக்களைக் காட்டும் புகைப்படங்கள், புள்ளிவிபரங்கள், பாதிக்கப்பட்டவர்களின் சாட்சியங்கள் ஆதியனவற்றை

(6ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாதம்

# 'றோ', த.தே.இராணுவம் உள்ளதால் புலிகள் ஆயுதம் வைத்துள்ளனர்

## - ரஞ்சன்



(கொழும்பு)

இந்திய உளவுநிறுவனமான றோவும், தமிழ் தேசிய இராணுவமும் இன்னும் இங்கு செயற்படுவதாக தமிழீழவிடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கருதுவதால் தான் அவர்கள் ஆயுதங்களை எடுத்துச் செல்கின்றார்கள் என நேற்று அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜெரெட்னா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் விடுதலைப்புலிகள் அரசாங்கத்தை நம்புவதாலேயே நாம் அவர்களுடன் பேச்சு நடாத்துகிறோம் என்றும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடாத்தப்படுகிறது என்று தெரிவித்த அமைச்சர் விஜயரட்னா விடுதலைப் புலிகளை ஜனநாயக வழிக்கு கொண்டுவர சந்தர்ப்பம் அளிக்கவேண்டும் என்றார்.

ஏனைய இயக்கங்சள் அரசாங்கத்தை நம்பவில்லை. ஈ. பி. ஆர். எல்.எப். இயக்கம் அரசாங்கத்தை நம்பவில்லை அவர்கள் இந்தியாவையே நம்பியுள்ளன. என்றும் தெரிவித்தார்.

ஈ. பி. ஆர் ,எல் எப் இயக்கத்தின் கோரிக்கைக்கு இணைந்த அடுத்த மாதம் 15 ஆம் திகதி அவர்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பளிக்சுப் பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து வெளியிடுகையில் ஜனாதிபதி விடுதலைப் புலிகளுடன் நம்பிக்கையுடன்பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றார் என்றும் ஜனாதிபதி குறிக்கோள்களுக்கு அமையச் செயற்படுவார் என்றும். எவரையும் திருப்திப்படுத்துவதற்காக குறிக்கோள்களை அவர் தியாகம் செய்யமட்டார் எஐறும் ரஞ்சன்விஜயரட்ன தெரிவித்தார்.

சார்க் மகாநாடு பற்றிய தொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் சார்க் மகாநாட்டை இலங்கையில் நடாத்துவது தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தற்பொழுது சிங்கள மக்கள் எதுவித பிரச்சனைகளுமின்றி தமது அலுவல்களைக் கவனிக்கக் கூடியதாக இருக்கின்றது என்றும் திரு. விஜயரட்ணா தெரிவித்தார்.

## கோமாரி நோய் பரவுகிறது பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் கோமாரி நோயினால் கோப்பாய் மணிப்புரி போன்ற பல இடங்களில் மாடுகள் அதிகம் இறந்துள்ளதால் இந்நோய் பரவாது தடுப்பதற்குத் தடுப்பூசி போடுவதுடன் நின்றுவிடாது வேறுபல முன்னேற்பாடான நடவடிக்கைகளை கால்நடை வளர்ப்போர் மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் துண்டுப் பிரசுரம் மூலம் கால்நடை வளர்ப்போரை எச்சரித்துள்ளார்.

இந்நோயின் ஆபத்துக்களை பற்றி மிகக் கவனமாக இருக்கும்படியும், மாடுகள் மாத்திரமல்ல ஆடுகளும் கூட இந்நோயினால் பாதிக்கப்படலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

கோமாரி நோய் கால்நடைகளுக்கு பரவாமல் தடுப்பதற்குத் தடுப்பூசி போடுவது மட்டும் போதாது என்றும் அவர் சொன்னார். இந்நோயைக் கட்டுப்படுத்த சில அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளது.

புதிதாக ஆடுகளையும் மாடுகளையும் வாங்க வேண்டாம்.

மாடுகளையும், ஆடுகளையும் அவிழ்த்துவிட வேண்டாம்

தோட்டங்களிலும், வயல்களிலும், பாதை ஒரங்களிலும் கால்நடைகளை மேய விட வேண்டாம்.

பொது நீர் நிலைகளான குளங்களிலும், கேணிகளிலும் நீர் அருந்த விடவேண்டாம்.

கால்நடைகளை இடம்விட்டு இடம் மாற்ற வேண்டாம் எனக் கால்நடை வளர்ப்போர்களை வடபிராந்திய உதவிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நோய்கண்ட மாடுகளைக் கொன்று அழிக்குமாறும், அப்படி நோயின் காரணமாக அழிக்கப்படும் மாடுகளுக்கு ஒரு கிலோ கிராம்உயிர் நிறைக்கு ரூபா. 6.50 சத வீதம் நட்ட ஈட்டினைக் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களம் வழங்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் விபரங்களை அறிந்துகொள்ள விரும்புபவர்கள் தங்கள் பகுதிக் கால்நடை வளர்ப்பு உத்தியோகத்தர்களைச் சென்று சந்திக்குமாறும் கால்நடை வளர்ப்போருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. (24)

## இன்று நூலகர் ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அயோத்தி நூலக சேவையினரின் ஆதரவுடன் இடம்பெறும் நூலகர்களுக்கான இரண்டாவது ஒன்று கூடல் இன்று (27- 4- 90) காலை 9 மணிக்கு திருநெல்வேலி இவ்லின் இரத்தினம் பல்லினப் பண்பாட்டியல் நிறுவனத்தில் நிகழவுள்ளது ''நூலகவியல்'' ''நூல்தேட்டம்'' ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியரும் இவ்லின் இரத்தினம் நிறுவன நூலகருமான திரு.என். செல்வராஜா அவர்களது ஏற்பாட்டில் இவ் ஒன்று கூடல் நடைபெறவுள்ளது.

''பத்திரிகைச் செய்திகள், கட்டுரைகளைத் தொகுத்துத் தயாரிக்கும் ஒட்டுப் பத்திரங்ளைப் பேணுதல்'' தொடர்பான உரையினை குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்கள் நிகழ்த்துவார். யாழ். மாவட்ட நூலகங்களுக்குள் இது தொடர்பான தொரு வலயவமைப்பை ஏற்படுத்தி ஒவ்வொரு நூலகத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருசில துறைகளில் வெளிவந்த தகவல்களைத் தொகுத்து வைக்கும் திட்டம் தொடர்பாக ஆராயப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள நூலகர்கள் இவ்வொன்று கூடலிற் பங்கேற்பார்கள்.

## மட்டக்களப்பு...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

சம் ரூபா யாழ். மாவட்ட சுயேட்சைக்குழு தேசிய பட்டியல் எம். பி. ஜனாப் எஸ். எம். பஷீர் ஒதுக்கீடு செய்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயேட்சைக்குழு பாராளுமன்ற உறுப்பினர் பதவி இதுவரை நிரப்பப்படாத காரணத்தினால் வழமையான தொகையில் இருபத்தைந்து லட்சம் ரூபா இவ் வருடம் வெட்டப்பட்டுள்ளது என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (37)

## ஆறாம் திருத்தம்..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை தகர்த்தெறிந்து வரலாற்றிற்குப் பெருமை சேகரிக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசியல் நிறங்களை முன்னணிப்படுத்திப் பிரிந்து நின்று வேடிக்கை காட்டுவது எந்தச் சிங்களபெரும்பான்மை அரசியற்கட்சிகளுக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வை விரும்பவில்லை என்கின்ற தேசிய வரலாற்றுப்பழியினை சுமக்க நேரிடும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மூலமே வடகிழக்கில் அமைதியின் தோற்றம் காணப்படுகின்றது. கடந்தகால அரசுகள் விட்ட தவறினைப் போல் இல்லாமல் இந்த அர

## புகையிரதப் பிரயாணிகளின் பொறுப்பற்ற செயல்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் இருந்து காலை யாழ்தேவி இரவுத் தபால் ரயில் ஆகிய இரண்டும் புறப்பட்டு மேடையைவிட்டு சற்றுச் சென்றதும் சிலர் அபாயச்சங்கிலியை இழுத்து நிறுத்துகிறார்கள் என புகையிரதப் பகுதி அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பயணம் செய்ய வந்தவர் ரயில் ஏறத் தாமதமானால் அல்லது ஒருவரைக் காணவில்லையென்றால் இவ்வாறு சங்கிலியை இழுத்து விடுகின்றனர்.

இதனால் ரயில்கள் தாமதமாவதுமட்டுமன்றி பயணிகளும் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் எனவும் அவர் சொன்னார்.

## தொழில்நுட்ப மாணவர் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகங்களின் உபவேந்தர் பேராசிரியர் டி. எஸ். விஜயசேகரா வரும் இருபத்தெட்டாம் திகதி சனிக்கிழமை யாழ். திறந்த பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்ய இருப்பதை இட்டு, யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகம் தொழில்நுட்பக் கல்லூரிக் கட்டிடங்களை ஆக்கிரமித்து வருவது குறித்து எதிர்ப்பை காட்டுமுகமாக அன்றைய தினம் தொழிநுட்பக் கல்லூரியின் முன் ஒன்று கூடி தமது ஆட்சேபனையை தெரிவிக்க உள்ளனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஒழுங்குகள் யாவற்றையும் தொழிநுட்பக் கல்லூரி வணிகமாணவர் மன்றம் ஒழுங்கு செய்துள்ளது. (லோ)

## ஐக்கியம், நட்புறவு புரிந்துணர்வு பேண் சமாதான ஊர்வலம்

(வவுனியா)

சகல இனங்களுக்குமிடையே ஐக்கியம், நல்லுறவு, பரஸ்பர புரிந்துணர்வு நிலவவேண்டும் என்ற நோக்குடன் வவுனியாவில் சமாதான ஊர்வலம் ஒன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் இதற்

மேற்படி சமாதான யாத்திரை நடைபெறும் என்றும், இதில் சகல மதத் தலைவர்களும் பங்கு பற்றுவதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தச் சமாதான யாத்திரைக்கு விடுதலைப் புலிகள் ஆதரவும், ஒத்துழைப்பும் தருவார்கள் என்று கேணல் குலதுங்கா அங்கு பேசும்போது குறிப்பிட்டார்.

நகரத்தின் சகல பகுதிகளி

## இந்திய இராணுவம்.

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மின்சாரசபைக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத மின்பாவனையினால் ஏற்பட்டுள்ள இந்த 129 மில்லியன் ரூபா நிலுவைப் பணத்தை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புனருத்தாரண புனரமைப்பு நிதி ஒதுக்கீடு செய்யும்போது அரசாங்கம் பதிவழிப்புச் செய்து உள்ளூராட்சி சபைகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். அல்லது இதற்கென வெளிநாட்டு உதவி பெறப்படவேண்டும் என்பதே எனது கோரிக்கை என்றும் அவர் கூறினார்.

1983ஆம் ஆண்டு அபிவிருத்தி நிதியிலிருந்து மின்சார விநியோகத்தை சீரமைப்பதற்கென 123 மில்லியன் ரூபா இலங்கை மின் சாரசபைக்கு

## ஊக்குவிப்பு அலவன்ஸ் வழங்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில அரச திணைக்கள ஊழியர்களுக்கு ஐம்பது சதவீத ஊக்குவிப்பு அலவன்ஸ் இதுவரையும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியின் கவனத்திற்கு இவ்விவகாரம் குறித்து கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் சாதகமான முடிவு இல்லை என சம்பந்தப்பட்ட திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆரம்ப நீதிமன்றம்மாவட்ட, நீதிமன்றம், மீன்பிடி இலாகா தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பனவற்றின் ஊழியர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

## பஸ் லொறி மோதல் 30 பேர் படுகாயம்

(சென்னை)

தமிழ் நாட்டில் திருநெல்வேலியிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த திருவள்ளுவர் பேரூந்து ஒன்று

மூன்று பேரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. இவர்கள் கோயில்பட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ளின் உபவேந்தர் பேராசிரியர் டி. எஸ். விஜயசேகரா வரும் இருபத்தெட்டாம் திகதி சனிக்கிழமை யாழ். திறந்த பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்ய இருப்பதை இட்டு, யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் திறந்த பல்கலைக்கழகம் தொழில்நுட்பக் கல்லூரிக் கட்டிடங்களை ஆக்கிரமித்து வருவது குறித்து எதிர்ப்பை காட்டு முகமாக அன்றைய தினம் தொழில்நுட்பக் கல்லூரியின் முன் ஒன்று கூடி தமது ஆட்சேபனையை தெரிவிக்க உள்ளனர்.

இந்த நிகழ்ச்சிக்கான ஒழுங்குகள் யாவற்றையும் தொழில்நுட்பக் கல்லூரி வணிகமாணவர் மன்றம் ஒழுங்கு செய்துள்ளது. (லோ)

## இந்தியப் படையின்

(8ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைந்த அளவில் கொண்டிருக்க வேண்டும். இந்தப் புத்தகங்கள் தமிழகத்திலுள்ள பத்திரிகையாளர்கள், அரசியல்வாதிகள், சமயப் பிரமுகர்கள் ஒவ்வொரு குக்கிராமங்களிலுமுள்ள வாசிகசாலைகளுக்கும் பாடசாலைகளுக்கும் அனுப்பப்பட வேண்டும். அதேபோல வடநாட்டிலுள்ள சகல அரசியல்வாதிகளுக்கும், பத்திரிகை ஆசிரியர்களுக்கும், சமய ஸ்தாபனங்களுக்கும், வாசிகசாலைகள் மற்றும் பள்ளிக்கூடங்களுக்கும் இந்தப் புத்தகத்தின் இந்திப் பிரதிகள் அனுப்பப்படல் வேண்டும். ஆங்கிலப் பிரதிகள் உலக நாட்டுத் தலைவர்கள் அனைவருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், பிரபல உலகப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியனவற்றின் ஆசிரியர்களுக்கும், சுதந்திரம், மனித உரிமை, ஜனநாயகம் ஆகியவற்றுக்காகப் போராடும் புனித ஸ்தாபனங்களுக்கும் அனுப்பப்படல் வேண்டும்.

இந்தியப் படையின் பிரிவுகள் இனிமேலும் அமைதிப் படை என்ற பெயரில் பிறநாடுகளில் சேவையாற்ற அழைக்கப்படலாம். அந்தந்த நாட்டு மக்கள் எச்சரிக்கையுடன் இருப்பதற்காகவும் இந்தியப் படை தமிழீழத்தில் செய்த அதே கொலைகளையும், அட்டூழியங்களையும் அந்நாடுகளில் செய்வதைத் தடுப்பதற்காகவும் இந்தியப் படையின் தமிழீழப் படுகொலைகள், அட்டூழியங்கள் பற்றி உலகறியச் செய்வது மிக மிக அவசியமாகும்.

க. பொன்னம்பலத்தரசன்
புங்குடுதீவு.

கால்நடை வளர்ப்பு உத்தியோகத்தர்களைச் சென்று சந்திக்குமாறும் கால்நடை வளர்ப்போருக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. (24)

தொடர்பாக ஆராயப்படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள நூலகர்கள் இவ்வொன்று கூடலிற் பங்கேற்பார்கள்.

# ஐக்கியம், நட்புறவு புரிந்துணர்வு பேண் சமாதான ஊர்வலம்

(வவுனியா)

சகல இனங்களுக்குமிடையே ஐக்கியம், நல்லுறவு, பரஸ்பர புரிந்துணர்வு நிலவவேண்டும் என்ற நோக்குடன் வவுனியாவில் சமாதான ஊர்வலம் ஒன்று நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை வவுனியா தமிழ் மகாவித்தியாலய மண்டபத்தில் இதற்கான ஏற்பாட்டுக் கூட்டம் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு வன்னி இராணுவ அதிகாரி கேணல் குலதுங்கா, விகாராதிபதி சியம்பலகங்வேவ கமலதேரோ உட்பட பலர் சமுகம் தந்திருந்தனர்.

எதிர்வரும் மே மாதம் பத்தாம் திகதி வவுனியாவில் மேற்படி சமாதான யாத்திரை நடைபெறும் என்றும், இதில் சகல மதத் தலைவர்களும் பங்கு பற்றுவதாகவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தச் சமாதான யாத்திரைக்கு விடுதலைப் புலிகள் ஆதரவும், ஒத்துழைப்பும் தருவார்கள் என்று கேணல் குலதுங்கா அங்கு பேசும்போது குறிப்பிட்டார்.

நகரத்தின் சகல பகுதிகளிலுமிருந்து ஊர்வலம் புறப்பட்டு மகாவித்தியாலய முன்றலை அடையும் என்றும், இதன்பின் அங்கு பொதுக் கூட்டம் நடைபெறும் என்றும் இக்கூட்டத்தில் சமாதானச் செய்தியொன்று அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வற்றை தகர்த்தெறிந்து வரலாற்றிற்குப் பெருமை சேகரிக்க வேண்டும். இந்த விடயத்தில் அரசியல் நிறங்களை முன்னணிப்படுத்திப் பிரிந்து நின்று வேடிக்கை காட்டுவது எந்தச் சிங்களபெரும்பான்மை அரசியற்கட்சிகளுக்கும் இனப் பிரச்சினைக்கான தீர்வை விரும்பவில்லை என்கின்ற தேசிய வரலாற்றுப்பழியினை சுமக்க நேரிடும் எனவும் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மூலமே வடகிழக்கில் அமைதியின் தோற்றம் காணப்படுகின்றது. கடந்தகால அரசுகள் விட்ட தவறினைப் போல் இல்லாமல் இந்த அரசும் உளப்பூர்வமான ஓர் அரசியலில் தீர்வினை முன் வைத்துத் தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமைகளை அங்கீகரிக்காத வரையில் எதிர்காலத்தில் வடகிழக்கில் அமைதி என்பதனை எதிர்பார்க்க முடியாது என தெரிவித்தார்.

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

மின்சாரசபைக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

சட்டவிரோத மின்பாவனையினால் ஏற்பட்டுள்ள இந்த 129 மில்லியன் ரூபா நிலுவைப் பணத்தை யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புனருத்தாரண புனரமைப்பு நிதி ஒதுக்கீடு செய்யும்போது அரசாங்கம் பதிவழிப்புச் செய்து உள்ளூராட்சி சபைகளுக்கு நிவாரணம் அளிக்கவேண்டும். அல்லது இதற்கென வெளிநாட்டு உதவி பெறப்படவேண்டும் என்பதே எனது கோரிக்கை என்றும் அவர் கூறினார்.

1983ஆம் ஆண்டு அபிவிருத்தி நிதியிலிருந்து மின்சார விநியோகத்தை சீரமைப்பதற்கென 123 மில்லியன் ரூபா இலங்கை மின்சாரசபைக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இத்தொகையைப் பெற்றிருந்தும் நிலுவையைக் கட்டுமாறு மின்சாரசபை கோருவது நியாயமற்றது என்றும் தெரிவித்தார்.

சட்டவிரோத மின்பாவனையைத் தடுப்பதில் உள்ளூராட்சிச் சபை ஊழியர்கள் தமது உயிருக்கு ஆபத்தான நிலையிலும் பணியாற்றுகின்றனர்.

பல இடங்களில் இவர்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது விடுதலைப் புலிகள் சட்டவிரோத மின்பாவனையைத்தடுப்பதில் எம்முடன் ஒத்துழைப்புத் தருகின்றனர்.

இந்த மின்சார நிலுவை செலுத்தப்படாவிட்டால் யாழ்மாவட்டம் விரைவில் இருளில் மூழ்கும் என வெளியான செய்திகள் நியாயமற்றது. இவ்வாறு ஆணையாளர் தெரிவித்தார்.

## வழங்கப்படவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சில அரச திணைக்கள ஊழியர்களுக்கு ஐம்பது சதவீத ஊக்குவிப்பு அலவன்ஸ் இதுவரையும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதியின் கவனத்திற்கு இவ்விவகாரம் குறித்து கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் சாதகமான முடிவு இல்லை என சம்பந்தப்பட்ட திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆரம்ப நீதிமன்றம்மாவட்ட, நீதிமன்றம், மீன்பிடி இலாகா தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை என்பனவற்றின் ஊழியர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது.

# பஸ் லொறி மோதல் 30 பேர் படுகாயம்

(சென்னை)

தமிழ் நாட்டில் திருநெல்வேலியிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த திருவள்ளுவர் பேருந்து ஒன்று விளாத்தி குளத்திலிருந்து மணலை ஏற்றி வந்த லொறி ஒன்றுடன் மோதியதால் முப்பதுபேர் பெருங்காயமுற்றார்கள் இச்சம்பவம் கோவிற்பட்டியில் நேற்று முன்தினம் நிகழ்ந்தது.

லொறி செலுத்திநர்உட்படச் மூன்று பேரது நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது. இவர்கள் கோயில்பட்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

## பதவி ஏற்கமாட்டார்

மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள திரு. சுகுமார் (சுயேட்சை அப்பதவியை ஏற்றுக்கொள்ள மாட்டார். என தெரிவிக்கப்படுகிறது.

## ஒப்பந்தக்காரர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் இம் மாவட்டத்தில் போதிய ஒப்பந்தக்காரர் இல்லாததாலேயே இந்த நிதியை பிரயோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

முழுமையாகப் பாதிக்கப்பட்ட கொக்குளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு ஆகிய கிராமங்களுக்கு புனருந்தாரண வேலைகளுக்கென 25 லட்சம் ரூபா விசேடமாக ஒதுக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கல்வித் திணைக்கள அதிகாரிகள் கவலை தெரிவித்ததுடன் இந்த நிதி பாவிக்கப்படாவிடின் திரும்பிச் சென்றுவிடலாம் எனவும் கூறப்படுகிறது.

## மதிய சாப்பாடு,

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றே மதியச் சாப்பாட்டை உண்டு வருகின்றனர்.

அரைமணி நேரம், மதியச் சாப்பாட்டை உண்டுவரப் போதாமல் இருப்பதாக மேற்படி கச்சேரி ஊழியர்கள் சிலர் புகார் தெரிவித்துள்ளனர். (இ)

முல்லியவளை

# வித்தியானந்தா மாணவர்கள் தென்பகுதிக்கு கல்விச் சுற்றுலா!

(வவுனியா)

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவர்கள் நேற்று வியாழக்கிழமை கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இரு பஸ்களில் நூற்றுக் கணக்கான ம்ாணர்களும் சில ஆசிரியர்களும் சுற்றுலாவை ஆரம்பித்தனர்.

ஏழு தினங்கள் இச் சுற்றுலா நடைபெறும். கண்டி திருமலை, கொழும்பு, மட்டக்களப்பு, புத்தளம் போன்ற பகுதிகளுக்கும் வேறு முக்கிய இடங்களுக்கும் இச் சுற்றிலா மேற் கொள்ளப்படும்.

அண்மைக்கால அமைதியை அடுத்து வடக்கில் உள்ள பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு, தென் இலங்கைப் பகுதிகளுக்குச் சென்று வருவது தெரிந்ததே. (தி)

## மயானம் திருத்தியமைப்பு

(கொழும்புத்துறை)

தாவடி பொது மயானத்திலுள்ள தங்குமடம் தாவடி மயான பரிபாலன சபையின் தலைவர் திரு. எஸ். செல்லத்துரையின் துரித முயற்சியால் திருத்தி நல்ல முறையில் புனரமைக்கப்பட்டுள்ளது.

மேற்படி மயானத்தின் புனரமைப்புக்காகப் புனர்வாழ்வு புனரமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு தாவடி காந்தி சன சமூக நிலையத்தின் ஊடாக 43 ஆயிரம் ரூபாவைக் கொடுத்து உதவியதை ஊர் மக்கள் வெகுவாகப் பாராட்டியுள்ளனர். (24)

# காரைநகரில் பரீட்சார்த்த இறால் வளர்ப்பு

(காரைநகர்)

காரைநகர் ஊரியில் அக்கிராம மக்களினால் நேற்று ஆரம்பிக்கப்பட்ட பரீட்சார்த்தமான இறால் வளர்ப்புப் பண்ணைகளில் இருந்து முதல் தொகுதியாக முதிர்ச்சியடைந்த இறால்கள் பிடிக்கப்பட்டன.

இப்பின்தங்கிய கிராமத்தினை மேலும் அபிவிருத்தி செய்து அப்பகுதியில் மக்களின் பொருளாதார வளத்தினை மேம்படுத்த அப்பகுதியில் இறால் வளர்ப்பு பண்ணைகளை விஸ்தரிக்க தமிழீழ ஆய்வு நிறுவவம் (ROOT) முயற்சி எடுத்து வருகின்றது.

இப்பரீட்சார்த்த இறால் வளர்ப்புத் திட்டம் திருப்திகரமா இருப்பதால் மேலும் பல பிரதேசங்களில் இறால் வளர்ப்பை ஊக்குவிக்க இந் நிறுவனம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன் மூலம் கணிசமான அயல் நாட்டு செலாவணியும் வேலை வாய்ப்பும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## மேற்பார்வையாளர்..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லில் நடைபெறவுள்ளது எனத் தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்களுக்கு நேரடியாக அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. அவை உரியவர்களுக்கு கிடைக்காத பட்சத்தில் பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ் கிராம சேவகரின் சான்றிதழ், அனுபவ சான்றிதழ் என்பனவற்றுடன் நேரில் வரும்படி அழைக்கப்படுகின்றார்கள். இந்நேர்முகப் பரீட்சைக்கு பெண்கள் சமூகமளிக்கத் தேவையில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பில் நாளை நடமாடும் செயலகம்

மட்டக்கிளப்பு மாவட்டத்தில் முதலாவது நடமாடும் செயலகம் எதிர்வரும் 28ம் திகதி வாகரை ம.வி. மண்டபத்தில் நடைபெறும்.

அரச உத்தியோகஸ்தர்கள் மக்களை சந்தித்து பிரச்சினைகளுக்கு தீர்வு காணவேண்டும் மென்பதற்காக அரச அதிபர் திரு ஆர் யோகநாதன் இதனை ஏற்பாடு செய்துள்ளார்.

கச்சேரியில் இயங்கும் சகல கிளைகளுடன் கல்வி, சுகாதாரம், நீர்ப்பாசனம், உள்ளூராட்சி, வீடமைப்பு, உட்பட சகல திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள்

## ஜே. வி. பி.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எரிகாயங்களுக்குள்ளான சிறுவர்களுக்குச்சிகிச்சையளிக்கப் பிளாஸ்ரிக்சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்காகப் பிரிட்டிஷ் டாக்டர்கள் குழுவொன்றும் இங்கு வரவுள்ளது.

## அநீதி...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

டுத்த வேண்டும் என்றார்.

தமிழர்விடுதலைக் கூட்டணி எம், பி. கருணாகரன் பேசுகையில் நாட்டின் நிலைமை வழமைக்குத் திருப்பிக்கொண்டிருப்பதால் அவசரகால விதி தேவையில்லை என்றார்.

## யாழ் நகர

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யுடன் இணைந்து செயற்படுத்தும் ரூபா 15, 000 கொடுப்பனவுத் திட்டத்தின் கீழ் யாழ். மாநகரசபைநிர்வாகஎல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்கள் தான் விண்ணப்பிக்க அருகதை உடையவர்கள் என்றும் யாழ். மாநர சபை எல்லைக் கப்பால் குடியிருப்பவர்கள் பெருந்தொகையாக விண்ணப்பப் படிவங்களைப் பெறவருவதால் சிலதடங்கல்கள் மாநகர சபைக்குஏற்படுகிறது என்றார்

விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுத் தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ள முதல் ஓரிரு நாட்களில் மிகக்குறைந்த எண்ணிக்கையினர் தான் வந்தனர். ஆனால் இன்று ஆயிரக் கணக்கான மக்கள் விண்ணப்ப படிவங்களைப் பெறத் திரள்கிறார்கள். இன்று வந்தவர்களின் பெயர்கள் பதியப்பட்டு அடுத்த வேலை நாட்களில் அவர்களுக்கு விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும். பூரணப்படுத்தப்பட்ட படிவங்களை மீளப்பெறுவதற்கு 26 ஆம் திகதி கடைசி நாள் என்பது பின்போடப்பட்டுள்ளது. இவ்வாறு ஆணையாளர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.